Registered No. M. 120.

ओं.

# JNÂNA BODHINI

## A TAMIL MAGAZINE AND REVIEW

DEVOTED MAINLY TO

LITERATURE, SCIENCE, PHILOSOPHY & RELIGION

EDITORS:

M. S. PURNALINGAM PILLAI, B.A.

V. G. SURYANARAYANA SASTRI, B.A.

Vol. V. No. 7.—February, 1902.

CONTENTS.

| | | PAGE. |
|---|---|---|
| Tamil Dictionary | Editors | 241 |
| Tiruvalluvar | T. Chelvakesavaroya Mudaliar, M.A. | 243 |
| Vikramôrvasiyam | P.M. Srinivasa Chariar | 250 |
| Râmâyana Sâram | C. Muthiah Mudaliar | 255 |
| Kallâdam : A study | S. A. Tirumalaikkolundu Pillai, B.A. | 261 |
| Classical Tamil Culture | V. K. Tillainayaka Mudaliar | 263 |
| Ramayana Venba | T. K. Narayanaswami Pillai | 266 |
| Râdhârâni : A Novel | T. A. Swaminatha Aiyar. | 268 |
| Curtain Lectures : Third Night | J. P. Vasudevaiya Pantulu | 271 |
| REVIEWS OF BOOKS | | 274 |
| EDITORIAL NOTES | | 279 |

Madras:

THOMPSON AND CO.,

33, POPHAM'S BROADWAY.

1902.

# JNANA BODHINI

**Terms of Subscription.**

**Annual Subscription including postage Rs... 2 8 0**

N.B.—The year begins with August, and subscriptions are not accepted for broken periods. New subscribers joining in the course of the year, will as far as possible be supplied with the back numbers of the current volume.

---

## TO ADVERTISERS.

**The Jnana Bodhini** affords the best and cheapest medium for advertising. It reaches all classes of people and commands the largest monthly circulation. Rate per page per insertion Rs. 5. Apply to Messrs. Thompson & Co., Publishers, Broadway, Madras.

---

*All literary contributions and books for Review and business letters, &c., should be addressed to T. A. Swaminatha Aiyar, Manager, The "Jnana Bodhini" Office, Black Town, Madras. All remittances should be made payable to Messrs. Thompson & Co., Publishers of "Jnana Bodhini," Broadway, Madras.*

---

## அறிக்கை.

**காரியஸ்தர்கள் தேவை.**

"ஞானபோதினி"ப் பத்திரிகையைப் பலவிடங்களில் பரவச்செய்து சந்தாதாரர்கள் சேகரித்து அனுப்பக்கூடிய காரியஸ்தர்களுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும். விவரந் தெரியவேண்டுவோர் "ஞானபோதினி" மானேஜருக்கு எழுதிக்கொள்க.

கோயமுத்தூர் இலாகாவுக்கு மகா-ள-ள-ஸ்ரீ சோமசுந்தர முதலியாரவர்களைக் காரியஸ்தராக ஏற்படுத்தியிருக்கிறோம்.

(மானேஜர்.)

## புதிய நூல்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. ரூபாவதி ... | 1 | 0 | 0 |
| 2. கலாவதி ... | 1 | 8 | 0 |
| ஷை கலிகோ ... | 1 | 12 | 0 |
| 3. சரசாங்கி ... | 1 | 0 | 0 |
| 4. சுகுணசுகேசர் ... | 0 | 8 | 0 |
| ஷை கலிகோ ... | 1 | 0 | 0 |
| 5. தசரதன் தவறு ... | 0 | 4 | 0 |
| ஷை கலிகோ ... | 0 | 8 | 0 |
| 6. உஷா பரிணயம் ... | 0 | 8 | 0 |
| 7. நாடக வியல் ... | 0 | 8 | 0 |
| 8. தனிப்பாசுரத்தொகை | 0 | 4 | 0 |
| ஷை கலிகோ ... | 0 | 8 | 0 |
| ஷை ஆங்கில மொழி பெயர்ப்புடன் ... | 1 | 0 | 0 |
| 9. பாவலர் விருந்து (முதல் நாள்) ... | 0 | 8 | 0 |
| ஷை கலிகோ ... | 1 | 0 | 0 |
| 10. தாமரை நாண்மலர் .. | 0 | 6 | 0 |
| ஷை கலிகோ ... | 0 | 12 | 0 |
| 11. வித்தியாரண்ய நகரம். | 0 | 8 | 0 |
| 12. நன்றியறியா மகன் .. | 0 | 8 | 0 |
| 13. பாரத ஸாரம் (முதற் பாகம் ... | 0 | 10 | 0 |
| ஷை கலிகோ ... | 1 | 0 | 0 |
| 14. வர்ண வைத்திய சாஸ்திரம் ... | 0 | 8 | 0 |
| 15. மச்சபுராணம் (செய்யுள்) கலிகோ ... | 2 | 8 | 0 |
| 16. திருமுல்லைவாயிற்புராணம் (கலிகோ) ... | 0 | 10 | 0 |
| ஷை (மார்பில்) ... | 0 | 8 | 0 |
| 17. செய்யுட்கோவை (கலிகோ) ... | 0 | 13 | 0 |
| ஷை மார்பில் ... | 0 | 10 | 0 |
| 18. விவேக விளக்கம் ... | 0 | 4 | 0 |
| 19. வாசகத்திரட்டு ... | 0 | 10 | 0 |
| 20. நகைப்பைத்தியம் (முதற்பாகம்) ... | 0 | 8 | 0 |
| ஷை (இரண்டாம்பாகம்) | 0 | 8 | 0 |
| 21. ஸ்ரீராமாநுஜ சரிதம். | 0 | 8 | 0 |
| 22. ஔவைகுறள் மூலம். | 0 | 2 | 0 |

இந்நூல்களெல்லாம் சென்னை **ஆரியன் புக் டெபோவிலும், தாம்ஸன் கம்பெனியாரிடத்திலும்,** அகப்படும். [illegible]

# ஞானபோதினி

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் V. } 1902வூ பிப்ரவரிமீ 20உ { புத்தகம் 7.

விஷயங்கள்.

பக்கம்.

தமிழகராதி.—பத்திராதிபர் ... 241
திருவள்ளுவர்—திருமணம்—செல்வகேசவராய முதலியார், எம். ஏ., ... 243
விக்கிரமோர்வசீயம்—பு. மா. ஸ்ரீநிவாசாசாரியர் ... 250
இராமாயண ஸாரம்.—செய்யூர் - முத்தைய முதலியார் ... 255
கல்லாடவாராய்ச்சி.—ஸ்ரீ. அ. திருமலைக்கொழுந்துப்பிள்ளை பி. ஏ., ... 261
செந்தமிழ்க்கல்வி.—வி. கே. தில்லைநாயக முதலியார் ... 263
இராமாயண வெண்பா.—தி. கோ. நாராயணசாமிப்பிள்ளை ... 266
இராதாராணி.—தி. அ. ஸ்வாமிநாத ஐயர் ... 268
பள்ளியறைப்பிரசங்கம்.—மூன்றாமிரவு : ஜ. ப. வாசுதேவைய பந்துலு ... 271
புத்தகக்குறிப்புக்கள்.—
பத்திராதிபர் குறிப்புக்கள்.—

பத்திராதிபர் :— { எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ.
வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.

சென்னை :
தாம்ஸன் கம்பெனியார்
பதிப்பிப்பது.

1902.

ரு. 2—8—0 சஞ்சிகை ரு. 0—4—0

# ஞானபோதினி

சம்புடம் V. } 1902௵ பிப்ரவரி௴ 20உ { புத்தகம் 7.

## TAMIL DICTIONARY.

## தமிழ் அகராதி.

நம் தமிழில் 'அகராதி' என்ற சொல்லே ஆட்சேபத்துக்கு இடமாயிருக்கின்றது. எழுத்துக்களுக்குக் கரச்சாரியை வழக்கு, தமிழ் மொழிகளிலேயன்றி வடமொழிகளில் இன்று. வடநூலார் கொள்வது காரச்சாரியையே. ஆதலின், தற்காலத்தில், 'அகராதி' யென்று வழங்குஞ்சொல், 'அகாராதி' யென்றிருத்தல் வேண்டுமென்பது பலருடைய கொள்கை. அற்றேல், பாஷையில் வழங்கி வந்த அகராதி யென்ற சொல்லை அகாராதி யென்று மாற்றுதல் எற்புடைத்தாகுமோ? அகாராதி யென்ற சொல்லே அகராதியென மருவிற்றென்றுரற் படுமிழுக்கென்னை?

அகராதியென்ற சொற்பொருளாராய்ச்சி யிவ்வாறாக, பிறபாஷைகளிலுள்ள அகராதிகட்குள்ள கௌரவமும் மகிமையும் நந்தமிழ் மொழியின்கணுள்ள அகராதிகட்கு எற்படாமற் போயினவென்று பல்லோர் கூறக்கேட்டிருக்கின்றோம். இஃதுண்மையே யெனயாம் அனுமோதிப்பதின்கண் யாதொரு தடையுமில்லை. ஏனெனில், பிறபாஷைகளிலுள்ள அகராதிகள் பாமரர் பண்டிதராகிய இருதிறத்தாராலும் அங்கீகரிக்கப்பட்டு மேற்கொள்ளப் படுமாறுபோல, நம்முடைய தமிழ்மொழியின்கணுள்ள அகராதிகள் பாமரர்களால் மட்டும் மேற்கொள்ளப்பட்டுப் பண்டிதர்களால் மேற்கொள்ளப் படாமலிருக்கின்றன.

இக்குறைபாட்டிற்குக் காரணம் யாதென ஆராயப்புகுந்த விடத்து, நம் தமிழகராதிகளிற் காணப்படுஞ் சொற்கள் தமிழ் நிகண்டுச் சொற்கள் மாத்திரமேயன்றி, ஆன்றோராட்சிக்கும் சொற்பொருளுணர்ச்சிக்கும் ஒத்துவாராத பலவகைப்பட்ட பாஷாந்தர மொழிகளும் பிறவுமாம். ஒருபாஷை நாள்தோறும் வளர்ச்சி யடைந்துகொண்டே வருவதாயின், அதன்கண் நாகரிக விருத்திக்கேற்றபடி சில புதுச்சொற்கள் புகுந்து பயிலுதல் இயல்பே. ஆதலின் முன்னரே ஏற்பட்டுள்ள சொற்களைத் தவிர்த்து வேறு புதுச்சொற்கள் ஆக்கவகையானுதல், மேற்கோள்வகையானுதல் கொள்ளப்படா வென்பது அறிவுடைமையின்பாற் படுமோ? நந் தமிழ்மொழி பேசுநருட் பலருக்குச் சான்றோர் செய்யுட்சொல் இவையெனவும் சாமானிய வழக்குச்சொல் இவையெனவும் பகுத்தறிந்துகோடல் அரிதாயிருக்கின்றது. இக்குறையை நீக்கவேண்டுவது அகராதிகளின் கடமைகளிலொன்றன்றோ? இச்சொல் செய்யுட்சொல் என்றும் இச்சொல் இழிசினர் வழக்குச்சொல் என்றும் ஆங்கிலமுதலிய பிறபாஷைகளிலுள்ள அகராதிகள் வரையறுத்துக் காட்டுமாறுபோல நம்தமிழகராதிகளும் வரையறுத்துக் காட்டுதல் வேண்டும். இனிக் குழூஉக்குறிபோல வழங்குஞ் சில சங்கேதவழக்குச் சொற்களும் அகராதிகளில் தனித்தனி யிடம்பெறுதல் வேண்டும். மரக்கலத்தொழில் செய்யும் மீகாமர் வழக்குச் சொற்களும், கொற்றொழிற் சொற்களும், கம்மத்தொழிற் சொற்களும், தச்சுத்தொழிற் சொற்களும், நெய்தற்றொழிற் சொற்களும் பிறவும் அகராதிகளிற் காணப்படாவிட்டால் அவ்வகராதிகளாற் சிறப்பும் விசேடப்பயனுமில்லையென்று துணிந்துரைக்கலாம். இன்னும் உள்ளவாறே நோக்குமிடத்து நிகண்டுடையாரும் பிழைபோன விடங்களுண்டு. உதாரணமாகச் சூடாமணி நிகண்டிற் "சாகஞ்சா கினிவெள் ளாடு தேக்கெனுந் தருவு தேனீ" யென்று கூறப்பட்டுளது. 'சாகம்' என்ற சொல்லுக்குத் தேனீயென்ற பொருளில்லை. 'சரகம்' என்ற சொல்லுக்கே அப்பொருளுண்டு. ஆகவே 'சரகம்' என்றதிலுள்ள ரகாரத்தைச் சகர ஆகாரத்தின் அறிகுறியாகிய காலென வரிவடிவிற்கண்டு மருண்ட மருட்சியே அப்பிழைக்கு உற்ற காரணமாமாறு தேற்றம். இவ்வாறு ஆராய்ச்சிக் குறைவால் நிகழ்ந்தவழு பிற்றைநா ளிலக்கியங்களிலும் இடம்பெற்று விட்டது. இலக்கண விலக்கியத் தெழுவரம் பிசைத்த சிவஞானமுனிவ

ரது மாணுக்கருட் சிறந்தவரும், தணிகைப்புராண நூலாசிரியருமா கிய கச்சியப்பமுனிவர் தமது வண்டுவிடுதூது என்னும் நூலின்கண் "ஏக்குலங்க டாங்கி யுதையாத சாகமே" என்று வண்டை விளிக்கின் றனர். ஆகவே நிகண்டேறி இலக்கியங்களினும் பயின்றுவருஞ் சொற்கள் தவறுடையன வென்பது பின்னர் நிகழும் ஆராய்ச்சிகளிற் காணப்படினும் அவற்றைத் திருத்தப்புகுதல் ஒருநாளுஞ் சாலாது.

இனி இது நிற்க. ஆசிரியர் தொல்காப்பியனுர் "மொழிப்பொருட் காரணம் விழிப்பத்தோன்ரு" என்ருரேனும் இக்காலத்து ஆராய்ச்சி களுக்கேற்றபடி நந்தமிழகராதிகளில் ஓராற்ருற் சொற்பொருட் கார ணங்களுங் காட்டப்படுதல்வேண்டும். சில சொற்களின் அரும்பொ ருள்களுக்கு நல்லிசைப் புலவர்களது பாமுறைகளினின்றும் பிரயோ கங் காட்டிச் செல்லவேண்டும் நம் அகராதிகள். ஆங்கிலம் முதலிய பிறபாஷைகள் நந்தமிழ்மொழிக்கு எத்துணையோ நூற்ருண்டுகள் பிற்பட்டுத் தோன்றியும் அவையனைத்தும் புதுமை வழிகளிற் புகு ந்து சிறந்து குறைபாடுகளொழிந்து விளங்குதல் நாம் கண்கூடாகக் காண்பதொன்றன்ரே? ஆகவே யாம் மேற்கூறிய விஷயங்களை நமது மதுரைப் புதுத் தமிழ்ச் சங்கத்தின் அதிகாரிகளும் அவயவிகளும் செவிக்கொண்டு ஏற்றவாறு முயன்று தக்க தமிழகராதிகள் வெளிப் படுத்தித் தமிழுலகத்தைக் கடமைப் படுத்துவார்களென்று நம்புகின் ரும்.

பத்திராதிபர்.

---

# TIRUVALLUVAR.

## திருவள்ளுவர்.

---

[208 - பக்கத்தொடர்ச்சி.]

"அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவ தெவன்" எனக்கூறிப் பின்னே "தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி வலைப் பட்டார் மற்றை யவர்" எனக்கூறியதும், "ஊழிற் பெருவலி யாவுள மற்ருெ ன்று, சூழினுந் தான்முந் துறும்" எனக்கூறிப் பின்னே "ஊழையு முப்பக்கக் காண்ப ருலைவின்றித், தாழா துஞற்று பவர்" எனக்கூறியதும் முரண்படக்கூற

லாம்; "இன்னுசெய் தாரை யொறுத்தல் அவர்நாண நன்னயஞ் செய்து விடல்" எனக்கூறிப்பின்னே "இன்னுசெய் தார்க்கும் இனியவே செய்யாக் கால், என்ன பயத்ததோ சால்பு" "என்றும் "நண்பாற்ரு ராகி நயமில செய் வார்க்கும் பண்பாற்ரு ராதல் கடை" என்றுங் கூறியது கூறியதுகூறலாம்; நட்பு அதிகாரப்பட்ட விடத்திற் சூது மருந்து என்பனவற்றை விரித்துரைத் தது மற்ருென்று விரித்தலாம் எனின், மேற் கூறியாங்கு நூலினை முற்றக் கற்று நூலின் நோக்கத்தைத் தொகுத்துப்பார்த்து நுனித்தறிவார்க்கு இவை களும் இவைபோல்வனபிறவும் அக்குற்றங்கள் ஆகாவாமென்க. இந்நூல் ஏறக்குறை... இப்பொழுது எஞ்சிசிற்கும் இலக்கியங்கள் எல்லாவற்றினும் முற்பட்டதாகக் காண்கின்றது. எங்ஙனமாயினும், இதற்கு முன்னே இன் ஞேரன்ன நூல் தமிழில் இருந்ததாகக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. வடமொழியில் உள்ள மிருதிகளும் சமயச்சார்புடனே ஙியாயப்பிரமாணங்கள் வருணுசிரம தர்மங்கள் முதலானவற்றை அவ்வக்காலத்துக்கேற்றபடி கூறிய நூல்களாயின. நாம் கண்ட கேட்ட பிறதேயங்களிலும் இவ்வகையான நூல் யாதொன்றும் இருப்பதாக இதுகாறுங் கேட்டிலோம். ஆகவே இஃது இணை யில்லாத நூலாயிற்று. நூற்பாகுபாடுகளும் நூற்போக்கும் நுதலிய பொரு ளும் நமதாசிரியர் தமது கல்வி கேள்விகளினுற்றலால் தாமே தமது புந்தி யிற் புதுவதாகக் கூர்ந் துய்த்தறிந் துரைத்தனவாதலின் இவ்வாசிரியரும் இணை யில்லாதவராயினர்.

" ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந் திதனினிது
சீரியதென் ருென்றைச் செப்பரிதால்—ஆரியம்
வேத முடைத்துத் தமிழ்திரு வள்ளுவனர்
ஓது குறட்பா வுடைத்து"

என்றுரைத்தார் இருமொழியிலும் வல்லராக எண்ணப்பட்ட கடைச்சங் கத்தினர். "என்னினுயர்வுறும் இனித் தமிழ்மொழியென, முன்னுறு பெரு வடமொழி யழுக்காறுறும்" என்றனர் பிற்பட்டவர்கள்.

வள்ளுவனர் ஒவ்வோரதிகாரத்தையும் பப்பத்துக்குள்ளாகக் கூறுவ தென்று வரையறுத்துக் கொண்டதில் இருவித இடர்ப்பாடுண்டு. அதிகாரப் பட்ட பொருள் பத்துக் குறட்குக் குறைவதாயின், கூறியது கூறுதல் மற் ருென்று விரித்தல் மிகைபடக்கூறல் முதலான குற்றங்களுக்கு இடமுண்டா கும். அதிகாரப்பட்ட பொருள் பத்துக்குறளின் மிகுவதாயின் குன்றக்கூறல் முதலான குற்றங்களுக் கிடமுண்டாகும். அன்றியும் விதிமுகத்தானும் மறை முகத்தானும் பல அதிகாரங் கூறவேண்டுவதுமாகும். கடவுள் வாழ்த்து அதிகாரப்பட்ட விடத்தில் நீடுவாழ்வார் இன்னர் என்பது இரண்டு குறளால் உணர்த்தினர். அவ்விரண்டு குறளையும் ஒன்ருக இணைத்திருக்கலாம். "அற வாழியந்தணன்ருள் சேர்ந்தார்க் கல்லாற் பிறவாழி நீந்தலரிது", என்ற குற

ளையும் "பிறவிப் பெருங்கட னீந்துவ ரீந்தார், இறைவனடி சேராதார்" என்ற குறளையும் ஒரு முடிபாக முடிப்பது நன்றாகும். இல்வாழ்க்கை அதிகாரப் பட்ட விடத்தில், துறவறத்தினும் இல்லறம் ஏற்றமுடையது என்பதற்கு "அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற், போஒய்ப் பெறுவ தெவன்?" என்றும், "இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான், முயல் வாரு ளெல்லாந் தலை" என்றும் "ஆற்றி னொழுக்கி அறனிழுக்கா வில் வாழ்க்கை, நோற்பாரி னோன்மை யுடைத்து" என்றும், மூன்று குறள் கூறி னர். நட்பு அதிகாரப்பட்ட விடத்திற் கூறவேண்டுவனவெல்லாம் ஓரதி காரத்தில் அடங்காமையால், அதனைப் பல வதிகாரங்களாக வகுத்துக் கொண் டார்.

நமதாசிரியர் இந்நூலை ஏனைப் பாக்களாற் கூறாது குறட்பாக்களாற் கூறிய எடுத்துக்கொண்டதனால், சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல் நவின்றோர்க்கினிமை நன்மொழிபுணர்த்தல் முதலான அழகுகள் இந்நூலில் இனிதாக அமைவனவாயின. ஆயினும் குறட்பாவாற் கூறுவதனாற் குறை யொன்று குறுக்கிடுகின்றது. அதுதான் யாதோவெனின், அதிகாரப்பட்ட விஷயங்களை இன்னதிதுவென ஒரு முடிபால் விளக்குவது விளங்கவைத்த லாக இருக்கும். அங்ஙனம் முடிபொன்றால் முடித்துக்கூற முடியாதாக, அதிகாரப்பட்ட பொருள் விரிவதாயின், அதனை ஒரு குறட்பாவில் விளங்க வைப்பது இயலாது. அமைச்சு, தூது, அரண், நட்பு என்றாற் போல்வன வற்றை விளக்குகின்றுழி இக்குறைவு எல்லார்க்கும் இனிது விளங்கும்.

இம்முதற்பாவலர் தமது நூலில் ஒவ்வோரதிகாரத்தையும் பப்பத்துக் குறட்பாவாகக் கூறுவதனாலும் இந்நூலைக் குறளாற்கூறிய எடுத்துக் கொண்ட தனாலும் எழுகின்ற இடர்ப்பாடுகளன்றி, இந்நூலில் வழூஉச்சொற் புணர்த்தல், மயங்கவைத்தல், வெற்றெனத் தொடுத்தல், சென்று தேய்ந்திறுதல், நின்று பயனின்மை முதலான குற்றங்கள் பலமுறைதேடித் துருவிப்பார்த்த விடத் துங் காணப்படுவனல்ல. ஆகவே இந்நூலின் நலங்களை இயன்றமட்டில் ஒருவாறு ஆராய்ந்து பார்ப்போம்.

**நாலடியாரிற்** "பெரியோர் கேண்மை பிறைபோல நாளும், வரிசை வரிசையா நந்தும் - வரிசையால், வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே, தானே சிறியார் தொடர்பு" எனப் பெரியோரது நட்பு வளர்பிறைச் சந்திர னைப்போல நாட்குநாள் வளரும்; இழிஞர் நட்புத் தேய்பிறைச் சந்திரனைப் போல நாட்குநாள் நகர்ந்துவிடும் என்பதை, வள்ளுவர் "நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப் பின்னீர பேதையார் நட்பு" என ஒரு குறளிற் சுருங்கச் சொல்லி யிருக்கின்றனர். "பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும், கருனைச் சோறார்வர் கயவர்-கருனையைப், பேரு மறியார் நனிவிரும்பு தாளாண்மை, நீரு மமிழ்தாய் விடும்" என்ற நாலடியின் கருத்துத் "தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த, துண்ணலி னூங்கினிய தில்" என்ற குறளில் அடங்கியிருக்கின்றது.

"திணையனைத்தே யாயினுஞ் செய்தநன் றுண்டால், பனையனைத்தா வுள்ளுவர் சான்றோர் – பனையனைத் தென்றுஞ் செயினு மிலங்கருவி நன்னட, நன்றில நன்றறியார் மாட்டு" என்றது நாலடி. "தினைத்துணை நன்றி செயினும் பனைத் துணையாக், கொள்வர் பயன்றெரிவார்" என்றது குறள். ஒருபொருளையோதும் இரண்டுநூலை ஒப்பிட்டுப் பார்க்குமிடத்தே அவ்வந்நூலின் திறம் விளங்கு மாதலின் இங்ஙனம் நாலடியையும் குறளையும் ஒப்பிட்டுப் பார்த்தோம். ஒப் பிட்ட ஒவ்வொரு பொருளையும் நமது குறளே சுருங்கச்சொல்வதா யிராநின் றது. ஆகவே இந்நூலிற் சுருங்கச்சொல்லல் என்னுமழகு நன்கமைந்துளது என்பதற்கு ஐயமின்று. நாலடி நீங்கலாகக் குறளோடு ஒப்பிடலான புராதன நூல்கள் இன்மையின் ஈதிம்மட்டில் நிற்க.

இங்ஙனஞ் சுருங்கச்சொல்லிப் போதல் இவ்வாசிரியர் வழக்காயினும், பொருள் கவர்படுதலும் திரிபாதலுமின்றித் தாம் கூறுவனவற்றை யெல்லாம் விளங்கவே வைத்திருக்கின்றனர். ஒரோவிடத்துண்டாகின்ற திரிபுதானும் உரையாசிரியர் தாஅனுட்டித் தனது ஏறுததலானும், பிறிதொடுபடாஅன் தன் மதங்கொளலானும் எழுவதேயன்றி ஆசிரியரால் நிகழ்வதன்று.

இந்நூல் முற்றுமே நவின்றோர்க்கினிமை பயப்பதாயினும், ஒவ்வோ ரதிகாரத்தினும் பெரும்பான்மையாய் ஒவ்வொரு குறள் நடுநாயகம் போன்று நனிநயம் பயப்பது. இந்நூலை ஒருமுறை யிருமுறை ஓதினார்க்கும் உணர்த லொன்றாகக் கிடக்கின்றது. இது மூன்றாவது பாலிற் பின்னும் சிறப்பாகக் காணப்படும். சிலவற்றை ஈண்டு எடுத்துக்காட்டுவோம். "உண்டார்கணல்ல தடுநறாக் காமம்போல், கண்டார் மகிழ்செய்த லின்று" என்பது தகையணங் குறுத்தல். குறிப்பறிதலில் "இருநோக்கிவளுண்கணுள்ள தொருநோக்கு, நோய் நோக்கொன்றந்நோய் மருந்து." "மழித்தலு நீட்டலும் வேண்டாவுலகம் பழித்த தொழித்து விடின்" என்றனர் கூடாவொழுக்கத்தில். "உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல், வடுக்காண வற்றாகுங் கீழ்" என் பது கயமை. நன்றியில் செல்வத்தை விரிக்குமிடத்தில் "வைத்தான்வாய் சான்ற பெரும்பொரு ளஃதுண்ணான், செத்தான் செயக்கிடந்ததில்." பெரு மை என்னு மதிகாரத்தில் "பணியுமாமென்றும் பெருமை சிறுமை, அணியு மாந்தன்னை வியந்து." "செவிக்குணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கு மீயப்படும்" என்றார் கேள்வியில். "அவ்வித்தழுக்கா றுடையானைச் செய்யவள், தவ்வையைக் காட்டிவிடும்" என்பது பொறாமையின் பயன்.

நன்மொழி புணர்த்தலாவது அவ்வப்பொருளுக்கேற்ப நல்ல சொற்களைச் சேர்த்தல். இதைச் சுட்டி நாம் எடுத்துரைக்க வேண்டா. "பழகுதமிழ்ச் சொல்லருமை நாவிரண்டில்" என ஔவையார் உரைத்துவிட்டனர். பிற் பட்டவர்களில் இலக்கணக் கொத்துடையார் "பல்காற் பழகினுந் தெரியா வுளவேல், தொல்காப்பியந் திருவள்ளுவர் கோவையார் மூன்றினு முழங்கும்" எனக்கூறினார்.

ஓசையுடைமை என்பலதைச் சந்தவின்ப முடைத்தாதல் எனக்கொள்ப வாதலின் ஈண்டு ஆராய்ச்சியின்று. நுதலும் பொருளைப் பலமுறையும் சிந்தித்தால் ஒருகாலைக்கொருகாற் கருத்து ஆழ்ந்து செல்வத்தை ஆழமுடைத்தாதல் என்னும் அழகென்பர். இவ்வழகு இந்நூலில் மிக்கிருப்பது மூன்றாவது பாலிலாதலின், வேண்டுவார் ஆண்டு ஆராய்ந்து கொள்க. முறையின் வைப்பதான அழகு பழைய தமிழ் நூல்களிற் குறளைக்காட்டிலும் வேறு எதனிடத்தும் நாம் கண்டதில்லை. வீடுபேற்றின் விழுமிய பொருளில்லை. அப்பேறு பெறுவதே இந்நூலின் முடிந்த நோக்கமாதலின் இதன்கண் விழுமியது பயத்தலும் உண்டு. குறளை எடுத்து மேற்கோள் கொடாத உரையில்லை. "ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலு மிரண்டுஞ் சொல்லுக்குறுதி." ஆகவே விளங்குதாரணத்த தாகுமழகு இந்நூல் முற்றும் உள்ளதாகும்.

பெண்பாலினர் தாம் அழகு மிக்குடையராயினும் அணிகலனணியும் அவாவுடையவர்கள். கவிவாணர்களும் தாம் உரைக்கும் பொருள் அழகுடையதாயினும் அதனை அணியமைத்தே அறைவர். "அணியிலாக்கவிதை பணியிலாவனிதை" என்றார் அகத்தியரும். நமதாசிரியரும் ஆங்காங்குச் சிற்சில அணிகளை அமைத்துவைத்தனர்.

பின் வருநிலை ஒரோ விடத்துக் காணப்படுகின்றது. "இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத், துறந்தார் துறந்தார் துணை." "நோயெல்லா நோய் செய்தார் மேலவாம் நோய் செய்யார், நோயின்மை வேண்டுபவர்." "பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப், பற்றுக பற்று விடற்கு." "சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை, வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து". "குன்றி யனையாருங் குன்றுவர் குன்றுவ குன்றியனைய செயின்".

பிறிதுமொழிதல் என்னும் ஒட்டணி இடத்துக்கேற்ப இயைந்துள்ளது: எளியரென்று பலரொடு பகைகொள்வான் தான் வலியனேயாயினும் அவர் ஒருங்குசேர்ந்த விடத்து வலியழிவான் எனக்கூற வந்தவர் "பீலிபெய் சாகாடுமச்சிறும் அப்பண்டம், சாலமிகுத்துப் பெயின்" என்றார். பகைமேற் செல்லத் தொடங்கித் தன்னாற் செல்லக்கூடிய அளவுவரையிற் சென்று நின்றவன் பின் அவ்வளவைக் கடந்து மேலுஞ் செல்வனாயின் உயிர் முடிவான் எனக்கூற எடுத்துக்கொண்டதை "நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந்தூக்கின் உயிர்க்கிறுதியாகிவிடும்" என்று கூறிவிட்டார். அரசர் தமக்குச் சாதகமும் பகைவர்க்குப் பாதகமுமான இடத்தில் நின்று சண்டைசெய்க என்ற கருத்தை "நெடும்புனலுள் வெல்லு முதலை அடும்புனலி, னீங்கினதனைப்பிற" என்றும் "கடலோடா கால்வல் நெடுந்தேர் : கடலோடும், நாவாயும் ஓடா நிலத்து" என்றும், "காலாழ்களரினரியடுங் கண்ணஞ்சா, வேலாண்முகத்தகளிறு" என்றும் எடுத்துரைத்தார். இன்னும் சில விடங்களில் இங்ஙனம் உரைத்திருக்கின்றனர்.

உவமைகளை அமைக்கமுடியாத இடங்களிலும் பொருளாற்றலை உரமெய்துவிக்க வேண்டின இடங்களிலும் உருவகமும் ஏகதேச வுருவகமும் அமைத்திருக்கின்றனர். அவற்றிற் சில வருமாறு :—"சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி" "பெருமைக்குமேனைச் சிறுமைக்குந் தத்தங், கருமமே கட்டளைக் கல்". "அல்லற்பட் டாற்றாதழுதகண்ணீ ரன்றே, செல்வத்தைத் தேய்க்கும் படை". "பொருளென்னும் பொய்யாவிளக்கம்." "கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை" "அருளென்னுமன்பீன் குழவி பொருளென்னுஞ் செல்வச் செவிலியாலுண்டு." "கேட்டினுமுண்டோ ருறுதி கிளைஞரை நீட்டியளப்பதோர் கோல்".

ஒரு நீதியை விளக்குமிடத்தில் தாம் வற்புறுத்த விரும்பும் பிறிதொரு நீதியை உவமானமாக எடுத்துக்காட்டி யிருக்கின்றனர் சிற்சில விடங்களில். "அழுக்காறுடையான்கண் ஆக்கம் போன்றில்லை, ஒழுக்கமிலான் கண் உயர்வு". "இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள், வன்மை மடவார்ப்பொறை". "தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின், அருளாதான் செய்யு மறம்." "பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை, நிச்ச நிரப்புக்கொன்றாங்கு." "கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை, சொல்லா நலத்தது சால்பு." "முதலிலார்க் கூதியமில்லை மதலையாஞ் சார்பிலார்க் கில்லை நிலை."

புலவர்களுடைய கல்வி கேள்விகளின் சிறப்பும் பிரபஞ்ச வியாபாரமும் பிரகிருதி ஞானமும் அவர்கள் தங்கள் நூலில் நுதலும் பொருள்களை விளக்கும்படி காட்டும் உவமானங்களாலே நன்கு விளங்கும். சாதாரணமான சம்பாஷணையில் தானும் அவரவர்கள் எடுத்துக்காட்டும் உவமானங்களால் அவரவர்களுடைய யோக்கியதை, இனத்தியல்பு, தொழிற்றிறம், மதியூகம், மனப்போக்கு முதலான சுபாவங்களெல்லாம் நன்கறியக்கூடும் அன்றோ. "ரவிகுடனிதாவு கவிகுசுனு" எனத் தெலுங்கரில் ஒரு பழமொழி உண்டு. அஃதாவது கதிரவன் நுழைந்து பாராத இடத்தையும் கவிகள் கண்டறிவர் என்பதாம். ஒரு ஸம்பந்தமும் இல்லாத பொருள்களுக்கு ஒற்றுமை நயங் கற்பித்து உவமானங் கொள்ளுதல் சிறந்த கவிராயர்களதியல்பாக இருக்கின்றது. தலைமயிருக்கும் ஒருவன் நிலைமைக்கும என்ன சம்பந்தமுண்டு? ஆயினும் நுனித்தறிவார்க்கு ஒற்றுமை புலப்படும். "தலையினிழிந்த மயிரனையர் மாந்தர் நிலையினிழிந்தக்கடை." ஆமைக்கும் அடக்கத்துக்கும் கற்பித்த ஒற்றுமை நயத்தைப் பாருங்கள் :—"ஒருமையுளாமைபோல் ஐந்தடக்கலாற்றின், எழுமையு மேமாப்புடைத்து" அனிச்சமலர் அதிதிக்கு ஆதாரமாவதைப்பாருங்கள் :—"மோப்பக்குழையு மனிச்சம் : முகந்திரிந்து, நோக்கக் குழையும் விருந்து." ஒருவனுடைய நிழலும் அவன் தீமையின் பயனும் ஒற்றுமைப்படுவதை உற்றுநோக்குங்கள் :—"தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை, வீயாதடியுறைந்தற்று." இன்னும் "கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால்சான்றோர், குழாஅத்துப்பேதைபுகல்." "சொல்வணக்க மொன்னார்கட் கொள்ளற்க வில்வணக்கம், தீங்கு குறித்தமையான்". "நவி

ஹுறு நூனயம்போலும் பயிஹுறும், பண்புடையாளர் தொடர்பு" என்றாற் போல்வன வற்றுள்ளும் இத்திறத்தை நன்கறிக.

சிற்சில விடங்களில் இவ்வாசிரியர் காட்டுகின்ற உவமைகளை நீக்கி வேறு எதை அமைத்துவைத்தாலும் பொருள் அவ்வளவு நன்ருக மனதிற் பதியாது அவ்வப்பொருளின் சிறப்பையோ அல்லது இழிவையோ வேறுவாயிலாக உரைக்கவும் இயலாது. உதாரணம் சில வருமாறு :—"உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே, இடுக்கண் களைவதா நட்பு" "வேலொடு நின்ருன் இடு வென் றதுபோலும், கோலொடு நின்ருனிரவு" "வினையான் வினையாக்கிக் கோடனனைகவுள், யானையால் யானையாத் தற்று" "பொருட்பெண்டிர் பொய்ம் மை முயக்கம் இருட்டறையில், ஏதில் பிணந்தழீஇ யற்று" "அற்ருர்க்கொன் ருற்ருதான் செல்வம் மிகநலம், பெற்ருள் தமியள்மூத் தற்று" இவ்வாசிரியர் காட்டிய உவமானங்கள் பரந்துபட்ட ஒரு வியாசத்துக்கு இடந்தருவனவாக விரிந்திருத்தலின் இவற்றை இங்கே இன்னும் விரித்துரைப்பது இயலாது.

ஒரோவிடத்துப் புகழ்வார் போன்று பழிப்பர் இவ்வாசிரியர். "தேவர னையர் கயவரவருந்தா, மேவன செய்தொழுகலான்". நன்றறிவாரிற் கயவர் திரு வுடையர், நெஞ்சத்தவலமிலர்.' அசம்பாவிதமான சில சம்பவங்களைக் கூறி அதிசயங் காட்டுவர் ஒரோவிடத்தில். "நீங்கிற் றெறூஉங் குறுகிற்றண் ணென்னுந்தீ, யாண்டுப் பெற்ருளிவள்." "பிணிக்கு மருந்து பிறமன் அணி யிழை, தன்னேய்க்குத் தானே மருந்து." நலம்புனைந்துரைத்தல் என்னும் அதிகார முழுவதும் அதிசயோக்தி. இஃது இக்காலத்தவர்க்குத் தக்கதன்ரும். ஆயினும் அது புணர்ச்சி மகிழ்ந்த தலைமகன் தலைமகள் நலத்தைப் புனை ந்து சொல்லியதாகப் புனைந்துரைத்ததாதலின் அதனைக் குற்றமாகக் கூறலாகாது.

இத்திருக்குறளை இயற்றியருளிய ஆசிரியர் இன்ன மதத்தினர் என்பதை விரித்துரைப்பதற்கில்லை. இவர் எச்சமயத்தவராயினுமாக. "ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா, னிந்திரனே சாலுங் கரி" என்றும் "மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான், பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" என் றும் "அந்தணர் நூற்கும் அறத்திற்கு மாதியா, நின்றது மன்னவன்கோல்" என்றும், "இயல்புளி கோலோச்சு மன்னவனாட்ட, பெயலும் விளையுளுந் தொக்கு" என்றும், "முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி, யொல்லாது வானம்பெயல்" என்றும், "ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர், காவலன் காவானெனின்" என்றும் வருவனவற்றால் இவர் பொதுப்பட ஹிந்துமதத்துக்குட்பட்டவர் என்பது துணிவு. ஆயினும் முதற் பாலில் முதற்குறளில் விஷ்ணுவுக்குரிய பகவத் நாமத்தை உரைத்தமையா லும், இரண்டாவது பாலில் "மடியிலா மன்னவனெய்தும் அடியளந்தான், தாஅயதெல்லா மொருங்கு" என நிலங்கடந்த நெடுமுடியண்ணலைக் குறித்த மையாலும், மூன்ருவது பாலில் "தாம்வீழ்வார் மென்ருேள் துயிலி னினிது

கொல் தாமரைக் கண்ணு னுலகு'' எனப் பரமபதத்தைக் குறித்தமையாலும், வள்ளுவர் வைணவரென்பார் வைணவர். "குறுமுனிவன் முத்தமிழுமென் குறளு நங்கை, சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்'' எனத் திருவள்ளுவரே கூறினதாகக் கூறும் ஒரு தனிப்பாடலையும் ஆதாரங்காட்டுகின்றனர். "ஊர வர் கௌவை யெருவாக வன்னைசொன், னீராக நீளுமிந் நோய்'' என்னும் அல ரறிவுறுத்த லதிகாரத்துக் குறளும் "ஊரவர் கௌவையெருவிட்டன்னை சொன்னீர்படுத்து'' என்னும் நாற்பான் மூன்றாந் திருவாய்மொழியின் நான் காம்பாசுரமும், "கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு மொண் டொடி கண்ணேயுள'' என்னுந் திருக்குறளும் "கண்டு கேட்டுற்று மோந் துண்குழலுமைங்கருவி, கண்டவின்பந் தெரிவரிய வளவில்லாச் சிற்றின்பம் ஒண்டொடியா டிருமகளு நீயுமேதிலா விற்ப'' என்னுந் திருவாய்மொழியும், பதினெட்டாவது திருவாய்மொழியில் "அணைவதரவணைமேல்...பூணைவன், பிறவிக்கடனீந்துவார்க்கே'' என்னும் முதற்பாசுரமும் 'பிறவிப்பெருங் கட னீந்துவர் நீந்தாரிறைவனடி சேராதார்'' என்னுங் குறளும் ஒன்றை யொன்று அடியொற்றிக்கொண்டாற்போலே யிருப்பதும் வள்ளுவர் வைணவர் என்னும் வைணவர்க்குற்ற சான்றும். "எண்குணத்தான் தாளை வணங்காத்தலை'' என்றது சிவபரமாதலாற் சைவர்கள் வள்ளுவரைச் சைவர் என்ப. "மலர் மிசை யேகினன்'' என்றதனாலும்! "அவிசொரிந்தாயிரம் வேட்டலினொன்ற னுயிர் செகுத்துண்ணாமை நன்று'' என்றதனாலும் ஜைனர்கள் வள்ளுவனாரை ஜைனர் எனக்கூறிக் கொள்வர், போப்பையர் "எங்கள் ஏசுநாதர் மலைமேற் செய்த ஹிதோபதேசத்தின் பிரதி சப்தமாகும் இத்திருக்குறள்' என்பர். எவரெவரெத்திறத்தார் அவரவர்க்கு அவ்வத்திறத்தவராய்க் காணப்படும் இவரை சர்வசமய சமரசவாதி என்பேன் நான்.

முற்றிற்று.

திருமணம்-செல்வக்கேசவராய முதலியார்.

---

## VIKRAMORVASIYAM.

## விக்கிரமோர்வசீயம்.

---

### இரண்டாமங்கம்.

பின்பு புகுகின்றனன் விதூடகன்

**விதூடகன்** :—ஏ! ஏ! பேருண்டிக் காணிக்கைப் பொருள்களினாற் போல் இவ் வேத்து மறையாற் பரவிய சனக்கூட்டத்துள் எனது நாவைக் காக்கவல் லேனல்லேன்; ஆகையால் அங்கவன் பணித்தவிசினின்று வருமளவும்

சனநடையாலொழிந்த விமானத்தையொத்த பிரதிச்சந்த மென்னும் பெயருடைய மேன்மாடத்தருகில் இருப்பேன். (சுற்றிப்போய்இருந்தனன்)

(புக்கு)

**தோழத்தை:**—'அடி நிபுணிகை! எது முதலாகப் பெரியோர்மகர், சூரிய பகவான் வணக்கஞ்செய்து திரும்பினரோ அது முதலாகப் பாழ் மனத்தினராய்க் காணப்படுகின்றனர்: ஆகையால் நீ போய் இவரது ஆசைக்குக் காரண மின்னதென ஆன்றோன் பிரமசாரித்தோழன் மூலமாய் அறி' என்று காசிராசன் மகளாகிய தேவியினால் ஏவப்பட்டிருக்கின்றேன்; ஆகையினாலே சாதியினாலந்தணன் எவ்வாறு வஞ்சித்தற்குரியன்? இல்லாவிடின், அடர்த்தியற்ற புல்லின் நுனியைப்பற்றிய பனிநீர்போல் இவனிடத்தில் வேத்துமமறை வெகு நாணில்லாது; இவனைத் தேடுகின்றேன் காண் (சுற்றிப்பார்த்து)இவன்சித்திரித்த குரங்குபோற் சும்மா இருக்கின்றான்; கிட்டுகின்றேன் காண். (கிட்டி) ஐயரே! தொழுகின்றேன்.

**விதூடகன்:**—மங்கள முனக்கு. (தன்னுள்) இக்கொடிய தொழுத்தையைக் கண்டு அந்த இராசரக்சியம் நெஞ்சைப்பிளந்து வெளிப்படுகின்றது. (விளக்கம்) நிபுணிகை! பாட்டுத்தொழிலை விட்டு எங்குப்புறப்பட்டிருக்கின்றாய்?

**நிபுணிகை:**—தேவியின் பேச்சால் உம்மைக்காணவே.

**விதூடகன்:**—அங்கவள் என்ன ஏவுகின்றனள்?

**நிபுணிகை:**—'ஐயரெப்பொழுதும் என்பாற் பரிவுடையர்; வேதனையையும் பெருந்துக்கத்தையும் அனுபவிக்கும் வண்ணம் என்னை ஒருபோதும் உபேக்ஷிக்கின்றிலர்' என்று தேவியுரைக்கின்றாள்.

**விதூடகன்:**—நண்பனால் என்னமாறுபாடு அங்கவட்குச் செய்யப்பட்டது?

**நிபுணிகை:**—எவள் பொருட்டாக் காதலர் காதலினரோ, அம்மாதின் பெயரால் அங்கவள் அவரா லழைக்கப்பட்டாள்.

**விதூடகன்:**—(தன்னுள்) அங்கவனண்பனால் மறைவேற்றுமை எங்ஙனஞ் செய்யப்பட்டது? இப்பொழுது நான் நாவடக்கத்தால் ஏன் துன்பமனுபவிக்கின்றேன்? (விளக்கம்) அங்கவனால்'உருப்பசி!' என்று அழைக்கப்பட்டனளா? அவ்வச்சரமாதின் தரிசனத்தாற் பித்துப்பிடித்த அங்கவன், அங்கவளை மாத்திரமன்றி என்னையும் களியாட்டு வெறுப்பினனாய்ப் பீடிக்கின்றான்.

**நிபுணிகை:**—(தன்னுள்) தலைவரது மறையரணப் பேதிப்பு என்னால் தந்திரமாகச் செய்யப்பட்டது. (விளக்கம்.) அங்கவளுக்கு என்ன விண்ணப்பிக்கின்றது?

**விதூடகன்** :—நிபுணிகை! 'தோழனைப் பேய்த்தேரினின்றும் திருப்புகைக்காக முயல்வேன் ; பிறகுதேவியின் முகத்தை நோக்குவேன்' என்று அங்கவளுக்கு விண்ணப்பிகாண்.

**நிபுணிகை** :—ஐயர் எது கட்டளை யிடுகின்றனரோ [என்று அகன்றனள்.]

(திரைக்குள்)

**வைதாளிகன்** :—தேவன் வெற்றிபெறுக.

பார்த்த லளவிச் சனங்களின் பல்லிருண் மாய்த்திடு செய்கையால்
தேர்க்கதி ரோற்கு முனக்குமே செல்லதி காரநே மராக்குமால்
நீர்க்கம லத்திறை வானடு விற்குமொ ரேகண நீபகற்
சீர்ப்பிரி வைந்துட னென்றிடைச் செல்குவை சிந்தையின் வண்ணமே.

**விதூடகன்** :—(சாதுகொதெத்த) இந்நண்பன் பணித்தவிசினின்று எழுந்து இங்கேயே வருகின்றான் ; இவனது மருங்கி லிருப்பவனாகின்றேன்.

[என்று அகன்றனன்.]

## உட்புகல்.

பின்பு புகுகின்றனன் காதல்கொண்ட வரசனும் விதூடகனும்.

**அரசன்** :—காண்டலள வான்தர் கட்கடையா நற்கணையான்
தூண்டியவெங் கூர்வாய் சுடுசரத்தால்—தோண்டுநெறி
உற்ற வெனதுளத்தை யும்பரிடத் தம்மாது
பற்றிப் புகுந்தனளே பார். (21)

**விதூடகன்** :—(தன்னுள்) பீழையன்றோ புகுந்தது எளியவளான் அக்காசிராசன் மகளுக்கு.

**அரசன்** :—மறைப்புதையல் காக்கப்படுகின்றதா ?

**விதூடகன்** :—(தன்னுள்) தாசியின் மகளால் வஞ்சிக்கப்பட்டவனா யிருக்கின்றேன் ; இல்லாவிடின், என்னை ஏன் நண்பனிவ்வாறு கேட்கின்றான் ?

**அரசன்** :—இங்கு நீயேன் வாளாவிருக்கின்றனை ?

**விதூடகன்** :—எவ்வாறு உனக்கும் மறுபேச்சு விரைவாய்ச் சொற்றிலேனோ

அவ்வாறு எனது நா தடுக்கப்பட்டிருக்கின்றது.

**அரசன்** :—தக்கதே ; இனி மனச்சுழற்சி கொண்ட என்னை எங்கு இப்போழ்து களிப்பிக்கக் கடவேன் ?

**விதூடகன்** :—மடைப்பள்ளியையே சேர்வோம் ; அங்கே சம்பாரங்கணிறைந்த ஐவகை யுணவுள்ள பாத்திரங்களைக் கண்டு ஆசையை வலியக் களிப்பிக்கக்கூடும்.

**அரசன் :**—(கைப்பேடு) ஆண்டு விருப்புற்ற பொருட்சுவையின் சேர்க்கையால் நீ களிப்பாய்; அடைதற்கரிய பொருளை விரும்பிய வென்னால் ஆன்மா எவ்வாறு களிப்பிக்கத் தக்கது ?

**விதூடகன் :**—அங்குநீ, அங்கவளுருப்பசியின் கண்ணோக்குற்றனையன்றோ ?

**அரசன் :**—ஆயினென்னை ?

**விதூடகன் :**—அடைதற்கரிய ளல்லளென்று ஊகிக்கின்றேனன்றோ?

**அரசன் :**—இது பட்சபாதமென்று எண்ணுவாய்.

**விதூடகன் :**—இவ்வாறு கேட்கும் நின்னால் எனக்குக் களிப்பு வளர்க்கப்பட்டது. அங்கவளுருப்பசி என்போனல்லுருவத்தினளா? அன்றி, உருவத்திற் சிறந்தவளா ?

**அரசன் ;**—(கைப்பேடு) மாணவக! அம் மேனியை உறுப்புக்கடோறும் உரைத்தற்கரிய வருணனை யெய்ந்ததென்றே அறிதி, சுருக்கமாய்க் கேள்.

**விதூடகன் :**—கருத்தாயிருக்கின்றேன்.

**அரசன் :**—கோலநிலைக் குச்சிறந்த கோலங் குலவணிக்கே
ஏலு மணிகலனு மென்னெலுவ - சாலும்
உவமையினுக் குஞ்சிறப்பை யுற்ற வுவமை
அவளுடல மென்றே யறி. (22)

**விதூடகன் :**—ஆகையாற்றான் வானமுதை விரும்புஞ் சாதகவிரதம் நின்னாற் கைக்கொள்ளப்பட்டது.

**அரசன் :**—விருப்பங்கொண்ட மனத்துக்குத் தனித்திருக்கு மிடத்தைவிடச் சரண் வேறின்று; ஆகையால் நீ பிரமதவன வழியைக் காட்டு.

**விதூடகன் :**—(தன்னுள்) என்ன கதி? (விளக்கம்) இதோ இதோ நீ. (சுற்றி) பிரமதவனத்திலுண்டாகிய இத்தென்றலினால் நீ விருந்தினன்போல் எதிர்கொள்ளப்பட்டாய்.

**அரசன் :**—(நோக்கி) இக்காற்றுக்குச் சிறப்புடைமை தக்கதே. எதனால் இது
சுந்தமார் மாதவியைத் தண்ணியதா கச்செய்துங்
குந்தக் கொடியிதைக்கூத் தாட்டுவித்தும்—வந்தெற்குத்
தோன்றுமாற் கண்ணோட்டங் கேண்மையிவற் றின்றொடர்பால்
ஏன்றவிழை வோனவன்போ லே. (23)

**விதூடகன் :**—இப்படியே உனதெண்ணம் இருக்கட்டும்; நீ இப்பிரமதவன வாயிலுட் புகு.

**அரசன் :**—முன்னே புகு. (இருவரும் புகுகின்றனர்)

**அரசன் :**—(நோக்கி) தோழ ! பிரமதவனத்துட்புகுதல் வெம்மையை நீக்குவதென்பது என்னானன் றெண்ணப்பட வில்லையன்றோ.

வெப்ப நீங்குகைக் காக விரைந்தியா
னிப்பொ ழிற்க ணியையுடன் புக்கதும்
அப்பு நீள்பெரு வெள்ளத்தி னாழ்ந்தவன்
தப்ப நீர்க்கெதிர் தாண்டுதென் மானுமே. (24)

விதூடகன் :—எவ்வாற்றால் ?

அரசன் :—

எளிதினிற் கிடையாப்பொருளினை விரும்பு மியல்பினின்றொழிப்பதற் கரிய
உளமென திதனைக் குறைத்தனன் முனமு முறுமலர்க் கணையினன் மலய
வளியினி லுதிரும் விளரிலை யுடைய வயங்குவ வனத்திடைத் தேமா
முளைகளி னணியைக் காட்டுபு வதிய முனக்கிடப் பதுவுமிங் குளதோ.

விதூடகன் :—சாலு மழுதல் ; காலநீட்டித்தலின்றிக் காரிகையைச் சம்பாதித்துக்கொடுக்கு மன்மதனே நினக்குச் சுகத்தைக் கொடுப்பவனுமாகுவன்.

அரசன் :—ஏற்றுக்கொள்ளப்பட்டது அந்தணன் மாற்றம்.

(இருவருஞ் சுற்றுகின்றனர்.)

விதூடகன் :—நீ காண்பாயாக ; வசந்தாவதாரத்தைக் காட்டுகின்ற பிரமதவனத்தினழகை.

அரசன்:—பாதவங்கடோறும் பார்க்கின்றேன் ; இங்கேயோ,

மாதருகிர் போற்சிவந்து மருங்கிரண்டிற் கருமையுறக் குரவ மன்னும்
போதரத்த நிறத்தழகு பொருந்திளவ சோகமலர் போதி னிற்கும்
சூதமரப் புதியவிணர் துகட்கணத்தி னுனிகபிசத் தோடு தோன்றும்
ஓதரிவை மடந்தைநிலைக் கிடையிலுறு மதுத்திருமுன் னுரிய நண்பே.

விதூடகன் :—மணிக்கற்பலகை படுத்த இந்தமாதவீ மண்டபம், வண்டுகண் மொய்த்தலாலுதிர்ந்த பூக்களினால் மறைக்கப்பட்டதாய்க் கொண்டு, தானே கைக்கொண்ட காணிக்கைப் பொருள்களை யுடையதுபோல் உன்னை எதிர்பார்க்கின்றது ; ஆகையாலிப் போழ்திதனை நீ யருள்வாயாக.

அரசன் :—நினக்கெங்ஙனம் இனிக்கின்றதோ (சுற்றிப்போயிருந்தனர்கள்)

விதூடகன் :—இங்கே நீ சுகமாயிருந்துகொண்டு, விளங்கிய கொடிகளாற் பற்றிய கண்ணுடையவனாய் உருப்பசியினிடத்தில் ஊன்றிய வாசையைப் போக்குவாயாக.

பு மா. ஸ்ரீநிவயசாசாரியர்.

# RAMAYANA SARAM. *

# இராமாயண ஸாரம்.

---

## அத்தியாயம்—I.

### முகவுரை.

உலகத்திலுள்ள நூல்களிலே பெருமையுஞ் சிறப்பும் வாய்ந்து விளங்குவன **மகாபாரதம், இராமாயணம்** என்னும் இதிகாசங்கள் இரண்டுமாம். இவ்விரண்டு நூல்களும் இந்தியாவுக்கு இரண்டு கண்களாகப் பாவிக்கப்படுகின்றன. மனுதர்ம சாஸ்திரமும், வேதமும் கல்வியிற் சிறந்தவர்களுக்கு மட்டிற் பயன்படுகின்றன. கல்வியின் வாசனையறியாத மற்றவர்கள் அவைகளையறிந்துகொள்ள வேண்டுமானால், கற்றவர்கள் மூலமாகவே அறிந்துகொள்ள வேண்டும். ஆனால் மகாபாரதம் இராமாயணம் என்னும் இவ்விரண்டு நூல்களுமோ, அப்படிப்பட்டனவல்ல. இந்நூல்களுட் கூறப்பட்டுள்ள கதைகள் இளைஞர்முதல் வயோதிகீறாகவுள்ள நம்மவர்களுள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் புகுந்து நம்மை நன்மார்க்கத்துக்குத் திருப்பும்படியான அற்புத சக்தியைப் பெற்றிருந்து பண் படுத்துகின்றன. ஒவ்வொரு வீட்டிலும் மாதாக்கள் மக்களுக்கும், ஆசிரியர்கள் மாணாக்கர்களுக்கும், முதியவர்கள் இளையவர்களுக்கும் பாரதராமாயணக் கதைகளைச் சொல்லி வருவது தொன்றுதொட்ட வழக்கமாயிருக்கின்றது. குழந்தைகள் வளரும்போதே இக்கதைகளை அடிக்கடி கேட்டு வருவதனால், இக்கிரந்தங்களிற் கூறப்பட்டிருக்கும் கதாநாயகர்களின்பெருமை சிறுமைகள், அக்குழந்தைகள் மனத்திற் பசுமரத்தறைந்த ஆணியைப்போலப் பதிந்து விடுகின்றன. அன்றியும், இவற்றிற் சொல்லப்பட்டிருக்கும் உத்தம புருஷர்களின் மீது ஒருவித அன்பும் பக்தியும் இயற்கையிலேயே தோன்றுவதுடன் அவர்களைப் போலவே தாங்களும் சன்மார்க்கத்தில் ஒழுகவேண்டுமென்னும் எண்ணமும் அவ்விளைஞர்கள் மனத்தில் உண்டாய் விடுகின்றது.

சன்மார்க்கத்துக்குத் திருப்பும்படியான வல்லமை இவ்வரிய பெரிய கிரந்தங்களுக்குள்ளதென்பது உண்மையே யானாலும், இவைகளுக்கு முன்னொரு காலத்திலிருந்த அவ்வளவு வல்லமை இக்காலத்திற் கிடையாது; இவ்விஷயத்தைப்பற்றி நாம் ஒவ்வொருவரும் பெரிதுங் கவலைகொள்ள வேண்டியவர்களாயிருக்கின்றோம். அவ்வித வல்லமையை இந்தக் கிரந்தங்கள் மீண்டும் பெறுமாயின், நம்மிந்தியாவானது வெகு சீக்கிரத்திலேயே தனது பூர்வீக உன்னத பதவியை யடையுமென்பது நிச்சயம். இவ்விரண்டு நூல்களும் சற்குணம் நிறைந்த உத்தமபுருஷர்களை நமக்குத்திருஷ்டாந்தமாகக் காட்டுகின்றன; அவ

* Adapted from Mrs, Annie Besant's—SHRI RAMA CHANDRA, The Ideal King.

ர்கள் அக்காலத்தில் அநுசரித்து வந்த நீதிதளையும், அவர்கள் முதிர்ந்தவர்களும் இளையவர்களும், புருஷர்களும் மனைவியர்களும், பெற்றோர்களும் பிள்ளைகளும், சகோதரர்களும் சகோதரிகளும், சத்துருக்களும்மித்திரர்களும் ஒருவர்க்கொருவர் எவ்வாறு நடந்துகொண்டார்களென்னும் ஒழுக்கமுறைமையையும் இந்நூல்கள் நமக்கு விவரமாய்த் தெரிவிக்கின்றன. இவ்வரிய விஷயங்களை நமக்குத் தெளிவா யெடுத்துக் காட்டுவதில் மகாபாரதத்தினும் இராமாயணமே பல மடங்கு சிறப்புடைத்தென்று சொல்லலாம். ஏனெனிற் பாரதத்திலுள்ள பெருங்கதையானது, நன்மையுந் தீமையும் ஒன்றோடொன்று வெகுவாய்க் கலந்து மயங்கிக் கிடந்த துவாபரயுகத்திறுதியின் இயல்பைக் கூறுவதாகும். இந்தக் கிரந்தமானது இக்காலத்தில் நடித்துக் காட்டப்படும் நாடகங்களைப் போன்றது. இதிலுள்ள கதாபுருஷர்களிடம் நற்குணமுந் தீக்குணமும் ஒருங்கே கலந்துள்ளன. இக்கதையிற் சிரோபூஷணமாய் விளங்குபவர் **ஸ்ரீ கிருஷ்ணபகவான்** ; ஆனால் அவர் மகாவிஷ்ணுவின் அவதாரம் ; அவர் மனுஷாதீதர் ; ஆகையால், அவர் மாசற்ற மணியென்பது நாம் கூறாமலே விளங்கும். ஏனைய கதாபுருஷர்களில், யாதொரு நிந்தைக்கும் இடம் பெறாத **பீஷ்மர்** ஒருவரைத் தவிர, மற்றவர்களில் ஒருவரையேனும் சற்குண சம்பன்னரென்று நாம் ஒருநாளுஞ் சொல்ல முடியாது. இவர்களில் ஒவ்வொருவரிடத்தும், நற்குணமுந் தீக்குணமும் ஒருங்கே கலந்துள்ளமையால், இவர்கள் செயல்களில் ஒவ்வொன்றையுந் தனியா யெடுத்துக்கொண்டு, இது நன்னெறியோ அல்லது தீநெறியோ என்று ஆழ்ந்த கருத்துடன் நாம் ஆராய்ந்து, அதன் பின்னரே ஒருவாறு தெளிவான முடிவுக்கு வரவேண்டியவர்களாயிருக்கின்றோம். ஆகையினால், மகாபாரதமானது கூரிய புத்தியையும், முதிர்ந்த அறிவையும், பகுத்தறியும் வல்லமையையும் பெற்று, பாபத்துக்குந் துன்பத்துக்குமுள்ள தொடர்பினை அறியவல்ல மதியூகிகளுக்கு மட்டிற் பயன்படத்தக்கதோர் அரிய நூலாயிருக்கின்றது.

ஆனால் இராமாயணத்திலோ, மேற்கூறியபடி பகுத்தறியவேண்டிய கஷ்டம் நமக்குச் சிறிதேனும் இல்லை. இதிற் கூறப்பட்டுள்ள கதாபுருஷர்களின் குணகுணங்கள் மிகவுந் தெளிவாய் வகுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவர்களுடைய குணங்களெல்லாம் விதியாகவேனும் விலக்காகவேனும் அமைந்து கிடக்கின்றன. ஒருவருடைய குணங்களைப் பார்த்தால், அவைகளைப் பார்க்கும்போதே நமக்கு ஒருவிதமான சந்தோஷமுண்டாகும் ; மற்றொருவருடைய குணங்களோ, அவ்வளவும் வெறுப்பைத் தரும். வெண்மையான வஸ்துக்களெல்லாம் வேறாகவும் கருமையான வஸ்துக்களெல்லாம் வேறாகவும் பிரித்து வைக்கப்பட்டிருக்கும் பக்ஷத்தில், இவைகளைக் கண்டு தெளிவதில் நமக்குக் கொஞ்சமேனுங் கஷ்டமிராதன்றோ? அவ்வாறன்றி, ஒரே வஸ்துவில் வெண்ணிறமுங் கருநிறமுங் கலந்திருக்கும் பக்ஷத்தில், அதைப் பார்க்கும்போது

இது வெளுப்போ, கறுப்போ, அல்லது கலப்போ வென்று நாம் எவ்வளவோ கலக்கப்பட நேருமன்றோ? இதுபோன்று கலங்கும்படியான சந்தர்ப்பம் நமக்கு இராமாயணத்தில் எவ்விடத்துங் கிடையாது. ஏனெனில், இந்நூலிற் சன்மார்க்க முடையவர்க ளெல்லாம் வேறாகவும், துன்மார்க்க முடையவர்க ளெல்லாம் வேறாகவும் பிரித்து வைக்கப்பட்டிருக்கின்றனர். சற்குணமுந் துர்க்குணமும் ஒருங்கே கலந்து இவர் சன்மார்க்கரோ அல்லது துன்மார்க்கரோ வென்றுநாம் கலங்கத்தக்க கதாபுருஷர் இராமாயணத்தில் ஒருவரேனும்இலர். அறிவிற் குறைந்த இளைஞர்களும் இந்நூலை வாசிக்கும் பொழுதே இன்னர் சன்மார்க்கரென்று தெளிந்து ஆனந்தம் பெறுவார்கள்; இன்னர் துன்மார்க்கரென்று கண்டு கசந்து வெறுப்பார்கள். ஓர் உத்தமமான மனைவிக்குத் திருஷ்டாந்தம் வேண்டுமானால், சகல சற்குணங்களையுமே சம்பத்தெனப் பெற்ற சீதாபிராட்டியினும் மேலான மனைவி யுண்டோ? செங்கோல் புரியும் அரசர்க்கோருதாரணம் வேண்டுமானால், நீதிகளே நிதியெனப்பெற்ற ஸ்ரீராமசந்திரனைப் பார்க்கிலும் மேலான ஒரு மன்னவனுண்டோ? சகோதரவாஞ்சையிற் சிறந்தவர்கள் வேண்டுமானால், தமையனுயிரையே தன்னுயிரெனப்பாவித்த இலக்ஷ்மணனிலும் மேலான உடன் பிறந்தானுண்டோ? ஆ! ஆ!! என்னே இவர்கள் பெருமை! என்னே இவர்கள் சிறப்பு!! இந்த உத்தமர்களின் திருநாமங்களை உச்சரிக்கும்போதே நம்மவர் ஒவ்வொருவருடைய மனமும் ஆனந்தக் கூத்தாடுகின்ற தன்றோ? இவர்களுடைய பெயரை நினைக்கும் பொழுதே இவர்கள் அந்நாளிற் செய்த அற்புதச் செயல்களெல்லாம் இப்போது நமது கண்ணெதிரேயே நிகழ்வனபோலத் தோற்றுகின்றனவே!

பூர்வீகத்தில் இந்தியாவானது இன்ன நிலைமையிலிருந்ததென்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமானால், அதற்கு இவ்விரண்டு நூல்களுமே பேராதரவாய் நின்று நமக்கு உதவி செய்கின்றன. ஆனால், அக்காலத்து இந்தியாவின் நிலைமையை பிரத்தியட்சத்திற் காண்பதுபோல், இந்நூல்கள் மூலமாய் நாம் இப்போது தெரிந்து கொள்ளக்கூடுமென்பது முடியாத காரியம். ஏனெனில், ஒரு காட்சியை நாம் நேரிற் கண்ணினாற் பார்ப்பதற்கும், அக்காட்சியைப் படமெடுத்து அது மிகவும் மாசு படிந்த பிறகு அப்படத்தைப் பார்ப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கின்ற தன்றோ? அதுபோலவே, பூர்வீக இந்தியாவின் நிலைமையை இந்நூல்கள் மூலமாய் நாம் இப்போது தெரிந்து கொள்வதானது, மாசுபடிந்த படத்தின் மூலமாய் உண்மைக் காட்சியைக் கண்டறிவதேயாம். இவ்வித நிலைமையிலிருந்த போதிலும், இந்நூல்களின் சிறப்பை இவ்வளவென்று அளவிட்டுச் சொல்லுதல் முடியாது. அக்காலத்தில் வசித்த ஒவ்வொரு ஜாதியாரும், சமூகத்தாரும், குடும்பத்தாரும் எந்நிலைமையிலிருந்தார்க ளென்பதையும், எவ்வாறு ஜீவனம் செய்துவந்தார்க ளென்பதையும், அவர்களுடைய இன்ப துன்பங்கள் இன்னின்ன வென்பதையும், சிறுவர்கள் எவ்வாறு கற்பிக்கப்பட்டார்க ளென்பதையும், பொதுஜன அபிப்பிராயம்

இத்தகைய தென்பதையும், இன்னும் இவைபோன்று முக்கியமான பல வேறு விஷயங்களையும் இந்த நூல்கள் நமக்கு வெள்ளிடை மலைபோல விளக்குகின்றன.

ஆகையினால், இராமாயணம் என்னும் பெருமை வாய்ந்த இந்நூலானது நம்மில் ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்கத் தக்கதாயும், அங்ஙனம் வாசிப்பதனால் நமக்கு அளவிறந்த நன்மைகளைக் கொடுக்கத் தக்கதாயு மிருக்கின்றது. இவ்வரிய நூலை நாம் வாசித்துக் கொண்டு போகும்போதே, இதிலுள்ள கதாபுருஷர்கள் எதற்காகத் தோன்றினவர்க ளென்பதையும், இவர்களில் ஒவ்வொருவராலும் என்னென்ன நீதிகள் கற்பிக்கப் படுகின்றன வென்பதையும், அவைகளைத் தெரிந்து கொள்வதனால் தற்காலத்து இந்தியாவானது எவ்வித நன்மையடையக்கூடு மென்பதையும் நாம் ஆராய்ந்து பார்த்துக் கொண்டே செல்வோமாக.

இராமாயாணம் என்னும் இவ்வரிய கிரந்தம் ஆதிகாலத்தில் எந்த ஸந்தர்ப்பத்தில் எவ்வாறு இயற்றப்பட்ட தென்பதைப்பற்றி முதலில் ஆராய்வோம். முன்னொரு காலத்தில் **வான்மீக** மகர்ஷியானவர் **நாரத** முனிவரைப் பார்த்து "முனிபுங்கவரே! பூலோகத்தில் தன்னுடைய கடமை யின்னதென்பதை யுணர்ந்தவனும், நன்றியுள்ளவனும், சத்தியவந்தனும், ஐம்பொறிகளையும் அடக்கியாள்வோனும், கூரியபுத்தியும் நேரிய வொழுக்கமும் ஒருங்கே யமையப் பெற்றவனுமாய் விளங்கிய உத்தமன் எவனேனும் எக்காலத்தேனும் இருந்ததுண்டோ? அத்தகைய பேரறிவாளன் இருந்திருக்கும் பக்ஷத்தில் அவனுடைய திவ்ய சரித்திரத்தை நீவிர் தயைசெய்து எனக்குக் கூறி யருள்வீராக" என்று கேட்டுக்கொண்டார். இதனைச் செவியுற்ற நாரத முனிவர் மிகவும் மனமகிழ்ந்து, வான்மீகியாரைப் பார்த்துப் பின்வருமாறு கூறுவாராயினர்: "தவசிரேஷ்டரே! நீவிர் கேட்டபடி பூலோகத்திற் சகல சற்குண சம்பன்னனாய் ஓரரசிளங்குமரன் தோன்றி யிருந்தது உண்மையே. அவன் இக்ஷ்வாகு என்னும் பெருமைவாய்ந்த அரசவம்சத்தில உதித்தவன். அவன் பெயர் ஸ்ரீராமசந்திரன். அவனே அரசர்சிகாமணி. அவனே அரசரேறு பொறுமையே பொருளெனக் கொண்டவன்; நான்குவேதம், ஆறுசாஸ்திரம், அறுபத்துநான்கு கலைகள் ஆகிய இவையனைத்தும் ஐயந்திரிபற உணர்ந்தவன்; யுத்தத்தில் மறவியையும் ஒரு பொருளென மதியாத வீரத்தன்மையை யுடையவன்; செங்கோல் செலுத்துவதில் எள்ளளவேனுந் தவறி யொழுகா நீதிமான்.

* "மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தா
லூனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மா
லானபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ?"

* பெரியபுராணம்.

என்னும் ஆன்றோர் வாக்கின் கருத்தினைச் சிரமேற் கொண்டொழுகிய செம்மல். மன்னுயிரையே தன்னுயிரென மதித்துவந்த பேரறிவாளன். இவன் ஆண்டநாட்டிலுள்ள குடிகளுக்கு வறுமை பிணி முதலிய துன்பங்கள் அணுகினதேயில்லை. சோரபயம், சத்துருபயம் முதலிய பயங்களுங் கிடையா. மாதம் மும்மாரி பெய்யவும், நாடெங்குந் தழைத்தோங்கவும், குடிகள் எவ்வகை அச்சமுமிலராய்க் காலங்கழிக்கவும், கண்டோர் யாவரும் இஃது என்னதேவேந்திரனது அமராவதியோ அல்லது குபேரனது அளகாபுரியோ வென்று அதிசயிக்கவும், இவ்வாறாக அரசுபுரிந்தான் ஸ்ரீராமசந்திரன்'' † என்று ஸ்ரீராமபிரானது குணாதிசயங்களையும், அயோத்திமா நாட்டின் சிறப்பியல்புகளையும் ஒருவாறு சுருக்கமாய் எடுத்துக் கூறினார் நாரதமுனிவர். இவையனைத்தையுங் கருத்துடன் கேட்டுவந்த வான்மீக மகர்ஷி உடனே ஆநந்த பரவசராயினார். அத்துணைச் சிறப்புவாய்ந்த அரசனின் பெருமைகளைக் கேட்டால் யார்தாம் ஆனந்தக் கூத்தாடார்? யார்தாம் ஆநந்தபரவசம் அடையார்? எந்தத் தேசத்திலே கோவுங் குடிகளுங் கருத்தொத்துத் தரும சிந்தையுடையவர்களாய்ப் பொதுநன்மைக்குப் பாடுபடுகின்றார்களோ, அந்தத்தேசம் அயோத்திமா நகரைப்போலவே செழித்தோங்கு மென்பது நிச்சயம். எந்த ஜாதியில் ஒவ்வொருவருந் தத்தம் வருணாசிரமங்களிற் பிறழ்வுறாது கௌரவமாயுங் கண்ணியமாயுங் காலங்கழிக்கின்றார்களோ, அந்த ஜாதியாருக்குச் சகலவிதமான இன்பங்களுங் கருணாநிதியாகிய கடவுளால் அவசியம் அளிக்கப்படும். ஆன்மஞான வழியின் ஒழுக்கமே, ஆக்கத்தைப் பெறுவதற்கோர் நேரியவழியாம். அவ்வழியி லொழுகுவார்க்கென்றே ஆக்கத்தைப் படைத்துள்ளான் இறைவன். ஆகையால், உலகத்திலுள்ள ஜாதியார்களெல்லாம் செல்வத்திற் சிறப்புற்றோங்கவும், ஒரு ஜாதியார் மட்டிற் குறைந்து படுவார்களானால், அதற்குக்காரணம் அதிலுள்ள ஜனங்கள் தத்தம் வருணாசிரமங்களை யலக்ஷியம் செய்து ஆன்மஞான வொழுக்கத்தை யடியோடே மறந்து, அதருமவழியை மேற்கொண்டு ஒழுகுவதேயாம். இந்த உண்மையைக் கவனித்து, இனியேனும் நம்மிந்தியச் சிறுவர்கள் ஞானமார்க்கத்தை நாடித் தருமவழியி லொழுகுவார்களானால், இந்தியாவைப் பீடித்துவரும் க்ஷாமமும் ஒழியும்; தேசமும் க்ஷேமப்படும்; அழகிழந்து நாணித் தலைகுனிந்துள்ள நம்மிந்தியமாதும், செல்வத்திற் சிறந்துள்ள ஏனைய ஜாதியார் முன்னிலையில் ஒருவாறு தலை நிமிர்ந்து, மீண்டும் பொலிவுடன் விளங்குவாள்.

மேற்கூறியபடி ஸ்ரீராமபிரானது வரலாற்றைக்கேட்டு மனமகிழ்ந்த வான்மீகர் தம்முடைய ஆசிரமத்துக்குத் திரும்புவாராயினார். இவர் சென்ற வழியி னிருபுறங்களிலும், விலங்குக ளெல்லாம் கவலையற்று ஒன்றோடொன்று விளையாடிக் கொண்டிருந்தன; பக்ஷிகளெல்லாம் மிகவும் இனிமையாகப் பாடிக்கொண்டிருந்தன; இவைகளை யெல்லாம் பார்க்க இவருடைய மனமும்

† வான்மீக ராமாயணம், பாலகாண்டம் § i.

அதிக சந்தோஷத்தை யடைந்தது. இங்ஙன மிருக்கையில், ஆங்குள்ளதோர் மரத்தின்மீது இரண்டு அன்றிற் பறவைகள் ஒன்றோடொன்று மிகவும் உல்லாசமாய் விளையாடிக்கொண்டிருந்தன. அச்சமயத்தில், யாதோவொரு மூலையிலிருந்து திடீரென்று ஒரு வேடனுடைய அம்பு வந்து, ஆங்கிருந்த ஆண்பறவையின் மீது ஊடுருவப்பாய்ந்து அதனுயிரை அரைநொடியிலே தொலைத்தது. அதனருகிருந்த பெண்பறவை, தன் இன்துணைவன் இறந்துபட்டது கண்டு துடிதுடித்துப் பதைபதைத்துக் கண்டவர்மனங் கலங்கும்படி அவ்விறந்த அன்றிலைச் சுற்றிச்சுற்றி வந்து, ஆற்றொணாத் துயரத்திலழுந்தி யலமந்து நின்றது. இந்தத் துக்கக் காட்சியைக்காண யாருடைய மனந்தான் சகிக்கும்? கல்மனமானாலும் கரைந்து படுமன்றோ? இதைப் பார்த்த மகர்ஷிக்குச் சினம் பெருகியது; மனம் உருகியது.

* "தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை"

என்னுஞ் செய்யுட் கருத்தை நன்குணர்ந்தொழுகும் முனிபுங்கவருக்கு, ஜீவவதையைக் கண்ணெதிரிற் கண்டும் வாளா விருத்தல் கூடுமோ? ஜீவவதையே சகலவிதமான துன்பங்களுக்குங் காரணமாதலாலும், யாதொரு தீங்கு மிழையாத அப்பறவையைக் கொன்றது பொறுத்தற்கரிய மகாபாப மாதலாலும், அவ்விதத் தீச்செயல் புரிந்தவனுக்கு ஒருநாளுஞ் சுகமுண்டாகா தொழிக வென்று முனிவர் சாபமிட்டார். இவர் கூறிய மொழிகள் பலவகைப் பண்களோடு கூடிப் பாங்குட னமைந்ததோர் சுலோகமாய் முடிந்தது. உடனே பிரமமாவானவர் இவருக்கு முன்பாகத்தோன்றி, இவர் அப்போது கேட்டுவந்த ஸ்ரீராமபிரானின் சரித்திரத்தை அதே மாதிரிப் பண்ணமைந்த பாடல்களாற் பாடும்படி கூறி, அக்கிரந்தமானது இவ்வுல குள்ளவரையில் அழியாது உலகத்தவர்க்கு நன்மை தரக்கடவதென்று ஆசீர்வாதமுஞ் செய்து போயினர். இவ்விதமாக இராமாயணமானது வான்மீக மகர்ஷியின் ஹ்ருதயத்தி னின்றுமெழுந்த அன்பின் மிகுதியாலுண்டாயிற்று. இதனை யார்யார் பயபக்தி விசுவாசத்துடன் பாராயணஞ் செய்கின்றார்களோ, அவர்களுக்கும் அவ்வாறே அன்புமேலிட்டு, இகத்திலும் பரத்திலுஞ்சகலவித இன்பங்களுங் கிடைக்குமென்பது நிச்சயம். இதனாலன்றே,

† "நாடிய பொருள்கை கூடு ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கு
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் றோள்வலி கூறு வார்க்கே"

என்று கம்பருங் கூறுவாராயினர்?

(இன்னும் வரும்.)

செய்யூர் - முத்தைய முதலியார்.

---

* திருக்குறள். † கம்பராமாயணம்.

# KALLADAM : A STUDY.
# கல்லாட வாராய்ச்சி.

(சம்புடம் IV, 455 - ஆம் பக்கத் தொடர்ச்சி.)

தமிழ்மாதின் எழில்நலனை இனிது நுகரவிரும்புநர்க்குக்கல்லாடத்தினும் சிறந்தவேறு நூலொன்று மின்றென்றும். "ஒருபானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் பார்த்தாற் போதும்" என்பதற் கிணங்க இந்நூலின்கணுள்ள பலதுறைகளையும் தனித்தனியே ஆராய்ந்து அவற்றின் நலத்தையின்புறப் புகின் விஷயம் விரிந்தோடுமாகலின் ஒரு துறையை மட்டுமே இவ்விடத்திற் சற்று விரிவாயாராயப் புகுந்தனம். இந்நூலின் முதற்செய்யுள் "தமர் நினைவுரைத்து வரைவுகடாதல்' என்னும் துறைத்து. தம்மிலொப்பற்ற காதலுடைய தலைவனும் தலைவியும் இயற்கைப் புணர்ச்சியால் இன்பமெய்தி, பின்னர் தோழியாலாகிய பாங்கியிற்கூட்டத்தினின்பத்தினையும் துய்த்துவருகையில், தலைவிக்கு நலங்கள் முற்றுவதைக் கண்டையுற்ற தாயார் முதலியோர் இவள் வெளியுலாவுதற்குப்பேரூகவிடாமையையும்,மற்றையுறவினர்தம்மக்கட்குப் பெண்கேட்கவிருக்கும் தருவாயையும் தோழியறிவாளாயினள். தலைவனோ வரைவிற்குடன்படிற் சில நாளேனும் தானுகரு மின்பம் தடைப்படுமென அஞ்சி இன்னும் சிறிதுகாலம் களவொழுக்கத்தினையே விரும்புவானாயினன்; அப்பொழுது பாங்கி தலைவர்க்குத் தலைவியின் நிலையைக்கூறிக் கடிதில் மணமுடிக்கத்தூண்டுதலே தமர் நினைவுரைத்து வரைவுகடாதல் என்பதாம். இத்துறையை விளக்கிய கல்லாடச் செய்யுளின் பொழிப்புப்பின் வருமாறு :—தேவாமிர்தத்தையும் கற்பகதருவையும் தனக்குக் குற்றேவல் செய்யும் நிதியாகப்படைத்த உடலக்கண்ணனது பதவியைக் கவர்ந்துகொண்ட சூரபன்மன் தம்பி தாருகாசுரன் போய் ஒளித்த **தானமாகிய**, அருளும் கல்வியும் பொங்கித்ததும்புமான்றோருள்ளம் போலத் தேன்பீறிட்டொழுகுமிருலானது நிலவைப்போற் கிடக்கும் **எழுமலையைப்** பொடியாயுதிர்ந்து போக வேல்தொட்ட வள்ளிமணாளனாகிய அறுமுகக் கடவுள் மயில்வாகநத்தில் மகிழ்வுடன் வீற்றிருக்கும் பதியாகிய அருவிபொழியும் பரங்குன்றத்தை யருகே பெற்ற நான் மாடக்கூடற் கண்ணுறையும் பிறையைச் சடைக்கண் தரித்த பரமசிவமும், பாண்டியனது மனத்தின் சங்கை யொழியக் 'கொங்குதேர் வாழ்க்கை' யென்று ஆரம்பித்த வண்டுமுகப் பாசுரத்தைச் செந்தமிழாற்கூறிப் பொற்கிழியைத் தருமிக்கருள் செய்து எனதுள்ளத்தையே கோயிலாக்கொண்டு எனக்கு வேண்டியவற்றை யளியா நின்ற கருணையங்கடலும் அர்த்த நாரீச்சுரரும் ஆகியவரது உபய பாதமலரை ஒருபோதும் நீங்காத மனத்தினை யுடைய சிலம்பனே—யான் கூறுவதைக்கேள். இவளது இணைமுலைகளோ அறிவில்லாச்சிறியர்க்குப் பெரிய நூலில் அரிய நுட்பப் பொருளை விவரித்த ஆசிரியர்க்குக் குற்றம் ஓங்கிவளர்

வதுபோலப் பெருத்தன. இடையோ ஊனைத்தின் றூன் பெருக்கும் தவத்தின ரது தவம் போலக் கட்குப் புலப்படாது தேய்ந்தது ; அளகமோ கடவுட்சிந் தையில்லாத நாத்திகர் மனம் போலிருண்டது ; கண்களோ வண்டு குடையும் செங்கழுநீர் மலர்போற் கறுத்துச் சிவந்தன ; இது நிற்க இவள் தமரோ இவளை யேகாந்தத்திற் கண்சிவந்துறுத்தி வாசற்படி கடவாவண்ணம் வற்பு றுத்தினர் ; (ஆதலின் நீ விரைவிற் களவொழுக்க மகற்றி வரைவிற்கு முடுகு வாயாக).

இத்துறையாற் கல்லாடரது அளவிறந்த சிவாநுபூதிச் செல்வமும் அறு முகக்கடவுளிடத்துள்ள அன்பின் மிகுதியும் அரிய நூலின் நுட்பங்களைப்பக்கு வர்க்கன்றி மற்றையார்க் குரைக்குநர் பாலுள்ள வெகுளியும் புலாலுண்டு தவம் செய்வார் மாட்டு இவர்க்கிருக்கும் தறுகண்மையும் ஈசுர சிந்தையற்ற நாத்திகர் பக்கலிருக்கும் அச்சமும் தமிழ் மொழிக்கணுள்ள அடங்காப் பேரு வகையும் தெற்றென விளங்கும்.

கல்லாடர்க்குத் தமிழ்மாதிட மிருக்கும் ஆர்வம் கீழ்வரும் பிரயோகங்க ளாலினிது புலப்படும். ஓரிடத்தில் 'தனுறை தமிழ்' என்றும், மற்றோ ரிடத்தில் 'தேவர் மருந்தும் தென்றமிழ்ச்சுவை' யென்றும், மற்றோரிடத் தில் 'மலையத் தமிழ்' என்றும், வேறோரிடத்து

'உவட்டா தமையா வுணர்வெனு பசியெடுத்
துள்ளமும் செவியும் உருகி.கின் றுண்ணும்
பெருந்தமி ழமுது' என்றும், இன்னுமோரிடத்தில்,
'உள்ளுதோ றுள்ளதோ றுணுவமு துறைக்குந்
திருமுத்தமிழும்' (83-ஆம் அகவல்.)

என்றும் பலவாறு தமிழது வியக்குஞ் சிறப்பை உரைத் திருப்பதனாற் புலவர் பெருமான தமழமிழ் தருந்திய தண்டமிழ்வாண ரென்பதற் கையமுமுளதோ ?

இன்னும் வரும்.

எஸ். ஏ. திருமலைக் கொழுந்து பிள்ளை.

---

# CLASSICAL TAMIL CULTURE.

## செந்தமிழ்க் கல்வி.

### ஆசிரிய வணக்கம்.

தூயபுகழ் மிகுவீர சைவசம யந்தனக்கோர் சுடரோ னாகி
மேயதமிழ்க் கலைகளெலா முறைமையினா னறிவகத்தின் மேவ வாய்ந்து
போயகலத் தீமதியெம் போல்வாருக் கெஞ்ஞான்றும் பொலிவி னல்குந்
தாயனைய விராமலிங்கச் சற்குரவ னிணையடிக டாழ்ந்து வாழ்வாம்.

மலர்தலை யுலகின் கண்ணே நால்வகைத்தோற்றத் தெழுவகைப் பிறப்பினுள்ளு ஊசல்போலப் பிறந்திறந்துழலும் ஆன்மகோடிகட்கு மானுட யாக்கை கிடைக்கப் பெறுவது சாலவரிது. கிடைக்கப் பெறின் கடலைக்கையா னீந்திக் கரையடைந்தது போலாம். இதற்கு “அண்டசஞ் சுவேத சங்க ளுற்பிச்சஞ் சராயு சத்தோ, டெண்டரு நாலெண்பத்து நான்குநூ றாயி ரத்தா,யுண்டுபல் மேனி யெல்லா மொழித்துமா னுடத்து தித்தல்,கண்டிடிற்கடலைக் கையா னீந்தினன் காரி யங்காண்” எனவும், “பரவை வெண்டிரை வடகடற் படுநுகத் தொளையுட்,டிரைசெய்தென் கடலிட்டதோர்நோன்கழிசிவணி,யரச வத்தொளை யகவயிற் செறிந்தென வரிதாற், பெரிய யோனிகள் பிழைத்திவண் மானுடம் பெறலே” எனவும் வரும் அறிஞர் வாக்கியங்களே போதிய சான்றாம். இது புண்ணியமேலீட்டினாலேயே சித்திக்க வேண்டுமென்பார் “புன்மர நெளி புழுப் புள்வி லங்கெனும், பன்மய றுயர்செயும் பவங்க டப்பியே, வன்மை கெரீ ணிலமிசை மக்க ளாகுத,னன்மைகொ ளுயிர்க்கலா லரிது” என்று **பிரபுலிங்கலீலை** நூலுடையாரும் அந்நூலுட் கூறுவாராயினர். இவ்வாறரிதி னெய்தக் கூடிய மானுட சரீரமோ இன்னகாலத்தின்ன காரணத்தா லிங்ஙனு மிறந்தொழியுமென்பது தேறற் கரியவிஷயம். “பால னான பருவம்போம் பன்னு குமாரப் பருவம்போம், கோல மான தருணம்போம் கோலை யூன்றிக் குனிந்தெழுந்து, காலன் மாய்க்க வனைவர்களுங் கல்லென் றழுது பேர்மாற்றி, யேலப் பிணமென் றொருபெயரிட் டிடுகாட் டிடுதலொருதலையே” என ஞானமுதிர்ச்சியுடையார் கூறியபடியே ஒவ்வொருகாலத் தொவ்வொன்றழியத் தானு முடிவி லழிதருந் தன்மையுடைய திச்சரீர மென்பதி யாவரும் சுருதியுத்தி அநுபவங்களானறிந்த விஷயமாதலிற் “காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்” என்னும் பழமொழிப்படியே எய்தற்கரிய விவ்வியாக்கை யெய்திய ஞான்றே எமக்குறுதிப் பொருள்களாயுள்ளன யாவையோ வென்றாய்ந்தவற்றைக் கைப்பற்றிக் கோடல் மாந்தர்க் கின்றியமையாத தோர் கடமைப் பாடென்றறிக.

இவ்வாறு கைப்பற்றிக்கொள்ளுந் தன்மையுடைய பொருள்களியாவை யெனிற் கூறுதும்,—அறம் பொருள் இன்பம் வீடெனு நால்வகைத்தாய புருஷார்த்தங்களாம். இம்மை மறுமை வீடென்னு மூன்றுந் தருமாற்றலுடைமையின் அறத்தை முதலாவதும், இம்மை மறுமை யென்னு மிரண்டுந் தருமாற்றலுடைமையிற் பொருளை யிரண்டாவதும், இம்மையின்ப மொன்றையே தருமாற்றலுடைமையி னின்பத்தை மூன்றாவதுமாக நிலைப்படுத்தி, முந்திய மூன்றனனுபவமுந் தீர்ந்து விரக்தியுண்டான பின்னரே யடையப்படுவது வீடென்பவாதலான் வீட்டை அம்மூன்றற்கு மிறுதியாகவும் முறைப்படுத்தி நிறீஇய தென்க. "சேருவர் வீடும் போகந் தீர்ந்துழிச் சேர்த லாலே" என்றார் **சேதுபுராண**த்தாரும். அற்றேல், தெய்வப் புலமைந்திருவள்ளுவ நாயனார் வீட்டியல்பு கூறாதொழிந்த தெற்றிற்கெனின் "தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளா, வானு வறமுதலா வந்நான்கு மேனோருக், கூழினுரைத்தாற்கு மொண்ணீர் முகிலுக்கும், வாழியுல கென்னாற்று மற்று" என்று **நக்கீரதேவர்** முதலியோர் பாயிரத்து ளருளினராதலின் நாயனார் அவ்வீட்டிலக்கணங்களை அறத்தின் பகுதியாகிய இல்லற துறவறமென்னு மிரண்டனுள் துறவறத்தின் பாற்படுத்துப் புருஷார்த்தங்களான்குமே கூறினாரென்க. ஆயின் ஏனையவற்றைத் தனித்தனிவியந்து வீட்டைத் துறவறத்தின் பாற்படுத்த திழுக்கன்றோ எனின், அன்று, "வீடென்பது சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகலின் துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படாமையின் நூல்களாற் கூறப்படுவன ஏனையமூன்றுமேயாம்" என்று **பரிமேலழகர்** கூறுதலானென்க. இத்தகைத்தாய சிறப்பு நோக்கியன்றே அறம்முதற் கண்வைக்கப்பட்டதூஉ மென்பது.

இனிப் பொருளாவது, முன்னின்ற அறத்தையும் பின்னின்ற இன்பத்தையும் தலைக்கூட்டுதற்குறு பெருந்துணையாய் நிற்பதொன்று. சிங்கநோக்கமாக இடையேவைத்தாளுதற்கு மிதுவே காரணம் போலும். இஃது இறைமாட்சிமுதற்பலதிறப்படும். அங்ஙனமாக "கல்வியுடைமை பொருளுடைமை யென்றிரண்டு, செல்வமுஞ்செல்வமெனப்படும்" என்றிங்ஙனம் இருதிறப்படுத்து வழங்குவதென்னெனின், பொருள் செயல்வகை படைமாட்சி முதலியவை பொருளின் பகுதியாகவும் கல்வி கேள்வி அறிவுடைமை முதலியவை கல்வியின் பகுதியாகவும், அடங்குதல்பற்றி யென்க. இவற்றை "பொன்னினாகும் பொருபடையப்பட்டை, தன்னினாருந்தரணி தரணியிற், பின்னையாகும் பெரும்பொருளப்பொரு, டுன்னுங் காலைத்துன் னாதன வில்லையே" "கற்பக்கழி மடமஃகுமடமஃகப், புற்கம்தீர்ந் திவ்வுலகின் கோளுணருங் கோளுணர்ந்தாற், றத்துவமான வெறிபடரு மந்நெறி, யிப்பாலுலகத் திசைநிறீஇ யுய்ப்பா, லுயர்ந்த வுலகம் புகும்" எனவும் வரும் ஆன்றோர் வாக்கியங்களானு மறிந்துகொள்க. இவ்விரு செல்வங்களும் ஏனையோர்க்கு முரியனவே யாக நாயனார் அரசன் மேல்

வைத்துக்கூறியது. இவற்றை அரச னுடையனுயக்கால் தன்னுயிர்க்கே யன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதற் சிறப்புடைமைநோக்கி யென்க.

செல்வப் பொருளாவது நன்னெறியா னீட்டப்படும் பொன்மணி நில முதலியவாம். நன்னெறியா னீட்டப்படும் பொருளே அறமுதலிய புரிதற் கேதுவாயிருந்து இருமை யின்பத்தையு முதவுறும். எனைப் புன்னெறிகளா னீட்டப்படும் பொருளால் அறமுதலிய செய்யினும் அது பெரும் பயனல்கா தொழிவதன்றி இம்மையினும் பெருந்துன்பத்தையும் இகழ்ச்சியையு முதவுறு மென்பதொரு தலையாம். இவ்வாறுதலினன்றே "தீவினை விட்டீட்டுபொருள்" என ஔவையாரும், "அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம், புல்லார் புரள விடல்" எனவும், "அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து, தீதின்றி வந்த பொருள்" எனவும் திருவள்ளுவரும் கூறுவாராயினதூஉ மென்பது.

இனிக் கல்விப் பொருளாவது கற்றற்குரிய நூல்களைக் கற்றல். கற்றற் குரிய நூல்களாவன பதார்த்தத்தை யுணர்த்தும் நிகண்டு முதலியனவும், சொல்லையும் பொருளையும் நிச்சயஞ் செய்தலான் மாந்தர்க்கிருகண் போலுதலின் * "எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்" எனவும் "எண்ணென்பவேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங், கண்ணென்ப வாழு முயிர்க்கு." எனவும், "எண்ணுமெழுத் துங்கண் ணிவையாய்ந்திந் நூற்பயனைக், கண்ணுககாண் பார்கற் கதி'. எனவுங் கொன்றைவேந்தனினும் திருக்குறளினும் பரமத திமிரபானு வினும் சிறப்பித்துரைக்கப்பட்ட தருக்கம் இலக்கணம் என்பனவும், மன்னனு மன்னுயிரு மொழுகுந்திறத்தை விதிவிலக்குகளான் விளங்கக்கூறும் நீதிநூல் களும், திரிபதார்த்தங்களையும் அனுமான முதலிய பிரமாணங்களாலும் தடத்த முதலிய இலக்கணங்களாலும் உணர்த்தும் வீட்டு நூல்களும், பிறவுமாம்.

கல்விப்பொருள் செல்வப்பொருளினும் அனேக மடங் குயர் வுடைத்தா தல் பற்றி மாந்தர்களான் அத்தியாவசியகம் ஈட்டற் குரிமை யுடைத்தாம் எது பற்றியெனிற் செல்வப்பொருள் இம்மையின்ப மொன்றையே யுதவுத லானும், பிறர்க்குக் கொடுக்குந்தோறும் நிறைவின்றிக் குறைவை யடைதலா னும், அவையின்க ணெல்லாருந் தன்னையுடையானை மெய்ச்சும்படிச் செய்யா மையானும், தாமுயிரோடிருக்கும் பொழுதே அழிவுறக் காண்டலானும் கள்வர் அக்கினி அரசர் முதலியோராற் கவரப்படுகின்றமையானும் பிறவாற்றானும் இழிபுடைத்தாக; அங்ஙனமின்றிக் கல்விப் பொருள் வருபிறப்புக்களினு முடன் சென்றுதவலே யன்றி இப்பிறப்பினும் பலவகையானின்ப முதவலா னும் பிறர்க்குக் கொடுக்குந் தோறுங் குறைவின்றி நிறைவே யடைதலானும்

* எண் என்பதற்குத் தருக்கமெனப்பொருளமாறு "காண்டலனு மானங் கதையருத்தா பத்தியிவை, யீண்டிசைத்த வெண்ணெனவே வெண்" என்பதனானறிக.

அவையின்கண் எல்லாருந் தன்னை யுடையானை மெய்ச்சும்படி செய்தலானும் தாமுயிரோடிருக்குங் கால் தனக்கொரு கேடின்றி யிருத்தலானும் கள்வர் அக்கினி அரசர் முதலியோரால் கவரப்படுதலின்மையானும் பிறவாற்றானு முயர்வுடைத்தாகலின் ஈட்டற்குரிமை யுடைத்தென்பது. இதனை "இம்மை பயக்குமா லீயக் குறைவின்றாற், றம்மை விளக்குமாற் றாமுளராக் கேடின்றா, லெம்மை யுலகத்து மியாங்காணேங் கல்விபோன், மம்ம ரறுக்கு மருந்து" "வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை,மிக்க சினத்தி னரசர் செறின் வவ்வா, ரெச்ச மெனவொருவன் மக்கட்குச் செய்வன, விச்சைமற் றல்ல பிற" என்றவரும் நீதிவாக்கியங்களான் தெற்றென உணர்க.

வி. கே. தில்லைநாயக முதலியார்.

---

# RAMAYANA VENBA.

## இராமாயண வெண்பா.

கண்ணுங் கருத்துங் கவரக் களியனங்கன்
நண்ணு மலர்சுருப்பு நாணெய்ய—எண்ணும்
பிடிகாளை யன்னவர்கள் பேதுற்று நின்றார்
வடிநோக் கலரான் மலைந்து. (25)

சனகன் மகனிகழுஞ் சாலைமண்ட பத்தில்
அனகன் முதலோ ரணுக—வினவியகோ
மானுவக்க வன்னோர் வரவுரைத்தா னோர்மன்னன்
வானுவக்க வேறவைத்தான் வாய்ந்து. (26)

தாசரதி கொற்றங்கள் சாற்றச் சனகன்கேட்
டாசறவில் லேயத னேடுற்ற—மூசிழையாள்
மண்ணு மணத்துக்கு மாறாய தென்றுரைத்தான்
எண்ணு மணத்துக் கியைந்து. (27)

அத்தனுவைக் காண்கின்ற வத்தனிவ னேயென்ன
மெய்த்தவனும் வேண்டவது மேவியதால்—வித்தகன்கை
எற்றது கண்டனரங் கிற்றதுகேட் டார்வானோர்
ஆற்றலரன் சாபமென லாய்ந்து. (28)

நகரை யணிகென்று நல்லோலை போக்கி
நிகரில் மணநாளை நேராய்ந்—திகன்மன்னன்
இன்பக் கடலாழ வேனை யரசவெள்ளம்
முன்புக் கனநகரை மொய்த்து. (29)

தயரதனுஞ் சேனைத் திரளோடு சந்த்ர
சயிலத் திறுத்துடனே சார்ந்தான்—அயிலியைந்த
கைத்தலத்த வேந்தர் களியா லளவளாய்
மெய்த்தலத்து வீற்றிருந்தார் மேல். (30)

கோலங்கண் டார்வீதி கோலியே கல்யாணக்
கோலங்கொண் டாரிருவர் கோநகர்வாழ்—சீலரெலாம்
கண்டுவக்க நெஞ்சங் கவர வுலாப்போந்தான்
வண்டுழக்குந் தண்டுழாய் மால். (31)

அனிச்ச மலர்மேலே யந்தளிர்க்கால் நோவப்
பனிச்சைவண்டு நாதம் படுப்ப—இனித்ததிரு
மாதேவல் மாதர் மருங்குறவே வந்தாளம்
மாதேவ மண்டபத்தின் வாய். (32)

மணவாளக் கோலமணி மன்னுமலர்ப் பொன்னும்
தணவா மணவறையைச் சாரக்—குணவாளர்
செய்தக்க செய்தபின்னர்த் தெய்வ வசிட்டனிட்டான்
நெய்தொக்க வோம நிலை. (33)

ஏனைச் சடங்கு மினிதியற்ற வஞ்சனகன்
மானே யிராமன் மலர்க்கரத்தில்—தானமுற
ஈந்தா னவனு மெழிற்சனகி கைப்பிடித்தான்
வாய்ந்தா ரெழுந்தார் மகிழ்ந்து. (34)

தானந் தருமந் தழைத்தோங்கத் தாபதர்கள்
மானந் தருமாசீர் வாதமுறக்—கானந்தும்
அம்மிமே லேற்றி யருந்ததியைக் காட்டினன்
விம்மிதுமால் யானையனன் மேல். (35)

மற்றைச் சகோதரரும் வாய்ந்த மணமருவக்
கற்றைக் குழலார் கழறுசுபம்—பெற்றுமிகு
போகக் கடலிடையே புக்கிருந்தார் பூவாளி
வேகக் கனலவிய வேறு. (36)

தானை புடைசூழச் சக்ரவர்த்தி சேயருள்ளிட்
டானவரோ டேகு மதரிடையே—கூனற்கூர்

அவையின்கண் எல்லாருந் தன்னை யுடையானை மெய்ச்சும்படி செய்தலானும் தாமுயிரோடிருக்குங் கால் தனக்கொரு கேடின்றி யிருத்தலானும் கள்வர் அக்கினி அரசர் முதலியோராற் கவரப்படுதலின்மையானும் பிறவாற்றானு முயர்வுடைத்தாகலின் ஈட்டற்குரிமை யுடைத்தென்பது. இதனை "இம்மை பயக்குமா லீயக் குறைவின்றாற், றம்மை விளக்குமாற் றாமுளராக் கேடின்றா, லெம்மை யுலகத்து மியாங்காணேங் கல்விபோன், மம்ம ரறுக்கு மருந்து" "வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை, மிக்க சினத்தி னரசர் செறின் வவ்வா, ரெச்ச மெனவொருவன் மக்கட்குச் செய்வன, விச்சைமற் றல்ல பிற" என்றுவரும் நீதிவாக்கியங்களான் தெற்றென உணர்க.

வி. கே. தில்லைநாயக முதலியார்.

---

## RAMAYANA VENBA.

## இராமாயண வெண்பா.

கண்ணுங் கருத்துங் கவரக் களியனங்கன்
நண்ணு மலர்சுருப்பு நாணெய்ய—எண்ணும்
பிடிகாளை யன்னவர்கள் பேதுற்று நின்றார்
வடிநோக் கலரான் மலைந்து. (25)

சனகன் மகளிகழுஞ் சாலைமண்ட பத்தில்
அனகன் முதலோ ரணுக—வினவியகோ
மானுவக்க வன்னோர் வரவுரைத்தா னோர்மன்னன்
வானுவக்க வேறவைத்தான் வாய்ந்து. (26)

தாசரதி கொற்றங்கள் சாற்றச் சனகன்கேட்
டாசறவில் லேயத னேற்ற—மூசிழையாள்
மண்ணு மணத்துக்கு மாறாய தென்றுரைத்தான்
எண்ணு மணத்துக் கியைந்து. (27)

அத்தனுவைக் காண்கின்ற வத்தனிவ னேயென்ன
மெய்த்தவனும் வேண்டவது மேவியதால்—வித்தகன்கை
எற்றது கண்டனரங் கிற்றதுகேட் டார்வானோர்
ஆற்றலரன் சாபமென லாய்ந்து. (28)

நகரை யணிகென்று நல்லோலை போக்கி
சிகரில் மணநாளை நேராய்ந்—திகன்மன்னன்
இன்பக் கடலாழ வேனை யரசவெள்ளம்
முன்புக் கனநகரை மொய்த்து. (29)

தயரதனுஞ் சேனைத் திரளோடு சந்த்ர
சயிலத் திறுத்துடனே சார்ந்தான்—அயிலியைந்த
கைத்தலத்த வேந்தர் களியா லளவளாய்
மெய்த்தலத்து வீற்றிருந்தார் மேல். (30)

கோலங்கண் டார்வீதி கோலியே கல்யாணக்
கோலங்கொண் டாரிருவர் கோநகர்வாழ்—சீலரெலாம்
கண்டுவக்க நெஞ்சங் கவர வுலாப்போந்தான்
வண்டுழக்குந் தண்டுழாய் மால். (31)

அனிச்ச மலர்மேலே யந்தளிர்க்கால் நோவப்
பனிச்சைவண்டு நாதம் படுப்ப—இனித்ததிரு
மாதேவல் மாதர் மருங்குறவே வந்தாளம்
மாதேவ மண்டபத்தின் வாய். (32)

மணவாளக் கோலமணி மன்னுமலர்ப் பொன்னும்
தணவா மணவறையைச் சாரக்—குணவாளர்
செய்தக்க செய்தபின்னர்த் தெய்வ வசிட்டனிட்டான்
நெய்தொக்க வோம நிலை. (33)

வினைச் சடங்கு மினிதியற்ற வண்சனகன்
மானை யிராமன் மலர்க்கரத்தில்—தானமுற
ஈந்தா னவனு மெழிற்சனகி கைப்பிடித்தான்
வாய்ந்தா ரெழுந்தார் மகிழ்ந்து. (34)

தானந் தருமந் தழைத்தோங்கத் தாபதர்கள்
மானந் தருமாசீர் வாதமுறக்—கானந்தும்
அம்மிமே லேற்றி யருந்ததியைக் காட்டினன்
விம்மிதுமால் யானையனன் மேல். (35)

மற்றைச் சகோதரரும் வாய்ந்த மணமருவக்
கற்றைக் குழலார் கழலுசுபம்—பெற்றுமிகு
போகக் கடலிடையே புக்கிருந்தார் பூவாளி
வேகக் கனலவிய வேறு. (36)

தானை புடைசூழச் சக்ரவர்த்தி சேயருள்ளிட்
டன்வரோ டேகு மதரிடையே—கூனற்கூர்

மாமழுவான் மூவேழ் வமிசத் தரசரைக்கொன்
றேமகிழ்வான் வந்தா னெதிர். (37)

தாடகையைக் கொன்ருன் றனைக்கிட்டி முன்னேதன்
தாடலைமேல் வைத்தமன்னைத் தள்ளிநின்றுன்—ஆடலென்னிம்
மானச் சிலையை வளையென்ருன் வல்லாயேல்
ஊனச் சிலையிறுத்தா யுற்று. (38)

என்றமொழி கேட்ட விராம னகத்திடையே
மன்ற வுவகை வரக்கடந்து—துன்றப்
பொருபுயமும் பூரித்துப் புன்முறுவ லுற்ருன்
திருமுகமுந் தேசுஞ் சிறந்து. (39)

வாங்கினன் ருசரதி வள்ளன் மலர்க்கரத்தால்
வாங்கியிதி விட்டவொரு வாளிக்குப்—பாங்குகுறி
என்னென்ருன் யான்செய்த வெல்லாத் தவப்பயனு
முன்னென்ருன் வந்த முனி. (40)

சரமுய்த்திட் டன்னேன் றவமனைத்துங் கொள்ள
உரமெய்த் தவனேக வுன்னும்—பரனுற்ற
மாகா தலனேடு மன்னர்கோன் வந்துற்ருன்
சாகேத நன்னகரந் தான். (41)

பரதானின் மூதாதை பார்க்கவவா வுற்ருன்
வரதாநீ கேகயம்போய் வாராய்—துரிதமாய்
என்ரு னிகன்மன் னிசைந்தா னிளைஞனெடு
சென்ரு னிருந்தானச் சேய். (42)

பாலகாண்டம் முற்றிற்று.

தி. கோ. நாராயணசாமி பிள்ளை.

---

## RADHARANI: A NOVEL.

## இராதாராணி.

### ஐந்தாம் அத்தியாயம்.

இராதாராணி கைகளைக்கூப்பிக் கொண்டு, 'தாங்கள் ருக்மிணீ குமார ராயரென்பது தங்கள் நிஜமானபெயரன்றென்று சொன்னீர்கள். அடியாள் எந்தப்புருஷனை எனது வழிபடும் கடவுளாக எண்ணியிருந்தேனே அந்தப்

புருஷனது பெயரைத் தெரிந்து கொள்வதற்கு மிகவும் ஆவலாயிருக்கின்றேன் என்றாள்,

**ருக்மிணி குமாரன்** :—என்பெயர் தேவேந்திர நாராயண ராயன்.

**இராதாராணி** :—ராஜா தேவேந்திர நாராயணராயரவர்கள் என்ற பெயரைக் கேள்வியுற்றிருக்கின்றேன்.

**ருக்மிணி குமாரன்** :—இந்தக்காலத்தில் இப்படியே பலரை ராஜா என்று சொல்லுகிறார்கள் ; என்னைக் குமார தேவேந்திர நாராயணராய னென்றழைத்தால் எனக்கு அதிகமரியாதை செய்தமாதிரியாகும்.

**இராதாராணி** :—இப்பொழுது எனக்குத் தைரியம் அதிகரித்தது தாங்கள் என் சுயஜாதியாரா யிருப்பதனால், தங்களுக்கு இன்று விருந்து செய்ய விருப்பங் கொண்டிருக்கின்றேன். தயவுகூர்ந்து அமுது செய்ய அங்கீகரிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**ராஜா தேவேந்திரநாராயணன்**:—'நான் உன்வீட்டிற் போஜனம் செய்யாமற் போவதில்லை'. என்று கூறினான்.

இராதாராணியின் உத்தரவுப்படிஅவளது திவான்வந்து ராஜாதேவேந்திர நாராயணனை அழைத்துக் கொண்டுபோய் யதோசிதமாய் உபசரித்தாள். ராஜா தேவேந்திர நாராயணன் போஜனத்துக்குவந்துஉடகார்ந்தவுடன்இராதாராணி தானே வந்து பரிமாறினாள் போஜனமானபின் இராதாராணி "வெகு காலமாய், ஒருநாளில்லாவிட்டால் இன்னொரு தினமாவது தங்கள் தரிசனத்தைப் பெற்றுத் தங்களைப்பூஜிக்கவேண்டு மென்னும் ஆசையுடன் பூஜை சாமக்கிரிகளைச் சேகரித்துக்கொண்டிருந்தேன் இந்த ஹாரமோ அதிசாமானிய மானது; ஆனால் நான் கொடுத்தேனென்று தங்கள் ராணியார் அணிந்துகொள்ளுமிடத்தில் நான் கிருதார்த்தையாவேன்" என்று சொல்லி, அந்த விலையற்றதும் உயர்ந்த வைரங்கள் பதிக்கப்பெற்றதுமான நக்ஷத்திர ஜாலமோ என்னும்படி பிரபையுடன் விளங்கிய ஒரு ஹாரத்தைக் கையிற் பிடித்துக்கொண்டு காட்டினாள்.

**தேவேந்திர நாராயணன்** :—'என் ராணியார் ? ராணி இல்லை. என் மனைவி போய் இப்பொழுது பத்து வருஷங்களாகின்றன. மறுபடியும் நான் விவாகம் செய்துகொள்ளவில்லை' என்றான்.

இராதாராணிக்குச் சற்றுநேரம் ஒன்றும் தோன்றவில்லை. மிகுந்த கஷ்டத்துடன் மனத்தை ஸ்திரப்படுத்திக் கொண்டாள். மனது ஸ்திரப்பட்டதோ இல்லையோ விளங்கவில்லை.

**இராதாராணி** :— தங்களுக்காகச் செய்துவைத்தது, தாங்களே அநுக்கிரகித்தருள வேண்டும். உத்தரவானால் தங்களுக்கு இந்த ஹாரத்தை நானே அலங்கரிக்கின்றேன் என்று சொல்லி, இனிய மந்தஹாஸத்துடன் அந்த நக்ஷத்திர மாலையை நிகர்த்த ஹாரத்தைத் தேவேந்திர நாராயணனுக்கு அலங்காரம் பண்ணினாள். தேவேந்திர நாராயணன் அலங்கரிக்கப் பெற்றவனாய் முகத்தில் மந்த ஹாஸம் தவழ இந்த ஹாரம் என்னுடையதே ஆயிற்றென்றான்.

**இராதாராணி** :—தாங்கள் தயவுகூர்ந்து அங்கீகரிக்கும் பக்ஷத்தில்,

**தேவேந்திர நாராயணன்** :—அங்கீகரித்தேன். இப்போது இஃது என் சொந்தப் பதார்த்தம் யார் எனக்கு இஷ்டமானவர்களோ அவர்களுக்குக் கொடுக்கலா மன்றோ ?

**இராதாராணி** :—தங்களுக்கு எஃது உபயோக மில்லையோ அதை யிதரர்களுக்குத் தானம் செய்வது அரசர்களியற்கையாயிருக்கிறது.

**தேவேந்திர நாராயணன்** :—இந்த ஹாரம் எனக்கு யோக்கியமான தன்று. அவ்வளவேன், நானே இந்த ஹாரத்துக்கு யோக்கியனல்லேன். நீயே இதற்குத் தகுந்தவள். உனக்கே இந்த ஹாரத்தைத் தானம் செய்தேன்.

இப்படிக்கூறி ஹாரத்தை வாங்கி இராதாராணியின் கண்டத்தில் தரிக்கச் செய்தான். இராதாராணி அதிருப்தி யடையவில்லை. தலைவணங்கிக்கொண்டு புன்சிரிப்புடன் ஒவ்வொருமுறை தலைநிமிர்ந்து தேவேந்திர நாராயணனது முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். தேவேந்திர நாராயணன் இதைத் தெரிந்துகொண்டு 'நான் இந்த ஹாரத்தை வாங்கிக்கொள்வதில்லை ; அதை உனக்கே கொடுத்தேன். எனக்கு வேறே ஹாரம் கொடு' என்று கேட்டான்.

**இராதாராணி**:—எந்த ஹாரத்தை?

**தேவேந்திரநாராயணன்** :—உன் கழுத்தில்'முதலிலிருந்த ஹாரத்தை.

இராதாராணி பரிசாரிகையை நோக்கி, 'சித்ரா ! இங்கே வா' என்றாள். சித்திரை மறைவில் நின்றுகொண்டு பார்த்திருந்தவள், 'இதோ வந்தேன்' என்றாள்.

**இராதாராணி** :—சுபவாத்தியங்கள் வாசிக்கும் வனிதையர் எங்கே யிருக்கிறார்கள் ?

**சித்திரை** :—இங்கேயே இருக்கின்றார்கள்.

**இராதாராணி** :—அப்படியாயின் அவர்களை வாசிக்கும்படி சொல்.

இவ்வாறு சொல்லி இராதாராணிதன்கண்டத்திலிருந்த ஹாரத்தை எடுத்துராஜா தேவேந்திர நாராயணனது கண்டத்தில் அலங்கரித்தாள். அவர்கள் வீணை, பிடில், சார்ந்தா, சுரபத்து, பியானோ முதலிய சுப வாத்தியங்களை வாசித்தார்கள்.

இனி யதா விதியாய் விவாகம் நடவாதா ? நடவாமலிருக்குமா ? வசந்த குமாரிவந்தாள். அவள் சகோதரர்களும் வந்தார்கள். ராஜா தேவேந்திர நாராயணனுடைய பரிவார மெல்லாம் வந்தன. ஆனால் அந்தக் கதையையெல்லாம் கேட்டு நமக்கொன்றும் பயனில்லை. நமக்கு வெகுமானம் கொடுக்கப்போகிறதில்லை. எழுந்திருங்கள் போவோம். இவ்வாறு எழுதிய இந்தக் கதையைப் பண்டிதர் முதலானவர்கள் தயவுகூர்ந்து வாசிப்பதே பெரிய வெகுமதி.

**முற்றிற்று.**

தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.

# CURTAIN LECTURES.

## பள்ளியறைப் பிரசங்கம்.

### Third Night - மூன்றாமிரவு.

**இராமசுப்ப ஐயர் தம்வீட்டிற் பாரம்பரியமாய் வந்த குடையோன் றினைத் தம் நண்பருளொருவராகிய வேங்கடராயருக்கு மழையில் நனையாது வீடுபோய்ச்சேருதற்குக் கொடுத்துதவினர்.**

"பொழுது விடிந்தால் இதே இழவாய் விட்டது. **என்னவா?** உமக்குக்கேட்பதற்கும் வாயிருக்கின்றதா? போன சங்கிராந்திப் பண்டிகைபோய் இன்னும் ஒருவருஷம்ஆகவில்லை. அதற்குள்மூன்று குடைகள் மாயமாய்ப்போய் விட்டன. **நீர் என்ன செய்வதா?** குடையைக் கொடுக்காமலிருக்க வேண்டியது. வேறென்ன செய்வது? **உம்முடைய சிநேகிதன் மழையில் நனையக்கூடா தென்று கொடுத்தீரா?** ஏன்? அந்தப்பாவி வேங்கடராயன் நனைந்தால் ஆகாதோ? என்னபாவம்! அவன் உடுத்திருக்கும் பட்டாடையும், போர்த்திருக்கும் சால்வையும் மழையில் நனைந்தால் கெட்டுப்போய்விடும். அப்படி விலையுயர்ந்த வஸ்திர மிருப்பவனுக்கு ஒருகுடைக்குத்தானு கதியில்லாமற்போயிற்று? **அவனுக்குச் சளிபிடிக்குமா?** அந்தச் சனியனைச் சளிதான் பிடிக்கட்டுமே! நன்றாய்ப்பிடிக்கட்டும். அப்பொழுது தான் புத்திவரும். அப்புறம் ஒரு குடையாவது வாங்குவான்.

"மழை தாரை தாரையாய்ப் பொழிவதும் உம் காதிற் படுகின்றதோ? பிரளயகாலம் வந்ததுபோற் பெய்கின்றதே? ஜன்னல் கண்ணாடிகளெல்லாம் காற்றடிப்பதனுல் உடைந்து போம்போ லிருக்கிறதே! காதாரக்கேட்டீரா? **உமக்கொன்றும் கேட்கவில்லையா?** கேட்குமா? கேட்டால் குடையை யெப்படிக் கொடுக்க முடியும்? என்ன சொன்னீர்? **தூக்கம் வருகின்றதா?** நீர் செவிடராயிருக்க வேண்டும்; இல்லா விட்டால் இந்த வல்லிடி மழையில் தூங்குவதற்கு ஆகுமோ? என்ன சொல்லுகிறீர்? **பேசாமல் படுத்துக்கொள்ளவா?** நான் மாட்டேன். எனக்குத் தூக்கம் வந்தாலன்றோ படுத்துக்கொள்வேன்? இந்தமழையிலும் காற்றிலும் எனக்குத்தூக்கம் வராது. **நீர் தூங்க வேண்டுமா?** நீர் தூங்கக்கூடாது. உம்மைத் தூங்க விட்டாலன்றோ நீர் தூங்குவதற்கு? விழித்துக் கொண்டேதா னிருக்கவேண்டும்.

"வீட்டிலிருக்கும் குடைகளையெல்லாம் ஒவ்வொன்றாகக் கொடுத்துவிட்டால், நாம் என்ன செய்வதென்னும் யோசனை கொஞ்சமாவது இல்லையே உமக்கு! **வேங்கடராயன் குடையை நாளைக் கொடுத்துவிடுவானு?** அவன் கொடுத்த காலத்திற்குப் பார்த்துக்கொள்ளலாம். இன்னும் நாலைந்து நாள் மழை விடப்போகிறதில்லை. வேங்கடராயனும் குடையைக் கொடுக்கப்போகிறதில்லை. **எனக்குப் பைத்தியமா?** எனக்குப் பைத்தியமோ உமக்குப் பைத்தியமோ நாளையன்றோ தெரியப்போகிறது! இப்பொழுதென்ன அதைப்பற்றி? பொழுதுவிடிந்தாற் பிள்ளைகளெல்லாரும் பள்ளிக்கூடத்திற்குப் போகவேண்டுமே? ஒரு குடைகூட வீட்டிலில்லாவிட்டால் அவர்கள் எப்படிப் போவார்கள்? **பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டாமா?** ஏன்?

அவர்கள் படிப்பெல்லாம் பாழாய்ப்போவதற்கா? பிள்ளைகள் படித்தால்தானே முன்னுக்கு வருவார்கள்; இந்த மழையில் அவர்களை யெப்படி நான் பள்ளிக்கூடம் போகும்படி சொல்வது? 'குழந்தைகள் இருக்கிறார்களே, அவர்கள் கஷ்டசுகமெல்லாம் நம்முடைய பொறுப்புத்தானே' என்ற யோசனை கொஞ்சமாகிலும் இல்லாவிட்டாற் குடும்பம் முன்னுக்கு வருவது எப்படி? அந்தப் பிள்ளைகள் தாம் எப்படித் தலையெடுப்பார்கள்? பிள்ளைகளுடைய யோகக்ஷேமத்தைக் கருதாத புருஷனுக்கு விவாகம் ஏன்? என்னைப்போல் ஒன்றுமறியாத பேதையர் கழுத்துக்கு அரிவாளா யிருப்பதற்குத்தான். வேறென்ன?

"ஓகோ! இப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது உம்முடைய தந்திரம்; சரிதான். நாளைத்தினம் நான் என் தாயார்வீட்டுக்கு உண்ணப்போவது உமக்குத் தெரியும். அதைத் தடுப்பதற்காகத்தான் நீர் இவ்வளவு செய்தீது.— ஐயோ! வேண்டாமே! ஒரு சமாதானமும் நீர் எனக்குச் சொல்லவேண்டியதில்லை. நான் அங்கே போவது உமக்கு இஷ்டமில்லை. அது எனக்கு நன்றாய்த் தெரியும். அதற்காகவே நீர் இந்த வழி தேடினீர்போலும். **அதற்காகச் செய்யவில்லையா?** என் பொய் சொல்லுகிறீர்? உம்முடைய எண்ணமெல்லாம் எனக்கு நன்றாய்த் தெரிந்தது. நீர் என்ன வேண்டுமென்றாலுஞ் செய்யும். என் தலையில் இடிவிழுந்தாலுஞ் சரி நான் என்னவோ போகாமல் நிற்கப்போகிறதில்லை. குடையில்லாவிட்டாற் போகமாட்டேன் என்று நினைத்தீரோ? மழையில் நனைந்துகொண்டு போகின்றேன். **ஜட்காவிற் போகலாமா?** எனக்கென்ன தலையெழுத்தா ஜட்காவில் போவதற்கு. 'இராமசுப்ப ஐயர் மனையாள் கொஞ்சமாவது வெட்கமில்லாமல் ஜட்காவண்டியில் ஏறிப்போனாள்' என்று ஊராரெல்லாம் இகழ்வதற்கா? நான் ஜட்காவில் ஏறமாட்டேன். நடந்துதான் செல்வேன். குடையில்லாததனால் வழி முழுவதும் நனைந்து செல்லவேண்டும். உம்மைப்போற்பாதக்குறடு போட்டுக்கொண்டு சடக் படக் என்று மினுக்கி நடக்க எனக்குத் தெரியுமா? ஈரமெல்லாம் தலைக்கேறட்டும்; அப்புறம் ஜலதோஷம் பிடிக்கும், காய்ச்சல்வரும். அவற்றை யெல்லாம் கட்டிக்கொண்டு உமக்கென்ன? வேங்கடராயன் தயவு சம்பாதித்தீரே! அது போதும்.

"நான் காய்ச்சலோடு படுத்துக் கொண்டாற் பிள்ளைகள் சாப்பாட்டுக்கென்ன செய்வார்கள்? நீர் என்னவோ உமக்கு வேண்டிய இடத்திற் சாப்பிடுகின்றீர். பிள்ளைகளை யப்படி விடுதற்காகுமா? இந்தக் கஷ்டமெல்லாம் உமக்குத் தெரிந்தால் தானே? எருத்துப்புண் காக்கை யறியுமா? பசு கன்று போடவில்லை யென்று குதிரை யோலமிட்டழப் போகிறதா? அது ஒன்றுமில்லை.

"மழையில் நனைந்து சென்றால் என் புதுப்பட்டுப்புடவை போவதற்குட் சேறாகிக் கெட்டுப்போய் விடுமே? ஊரெல்லாம் என்னைப்பார்த்து நகைக்குமே? **பட்டுப் புடவையைக் கட்டவேண்டாமா?** சரிதான்! பிச்சைக்காரி வேஷம் போடவேண்டு மென்று சொல்லுகிறீரோ? அப்போதாவது உமக்குச் சந்தோஷமா யிருக்குமா? மற்றைப்பெண்டிரைப்போல் நான் எங்கேயாவது போகிறேனா? தெய்வமே யென்று வீட்டில் அடிமைபோல் உழைத்துச் சாகிறேன். ஏதோ ஒருநாள் என் தாய் வீட்டுக்குப் போக வேண்டு மென்றாற் கந்தைத்துணி யுடுத்துச் செல்லவேண்டு மென்கிறீரே? இது உமக்குத் தருமமா? எந்தப் புருஷனாயினுந் தன் மனைவியைக் கந்தை யுடுத்து வெளியே

செல்லும்படி விட்டதைப் பார்த்திருக்கிறீரா? எங்கேயாவது கேட்டதும் உண்டா? நீர் என்னவேண்டு மென்றாலும் சொல்லும்; நான் பட்டுப்புடவையைக்கட்டிக்கொண்டே போவேன். அது நனைந்து ஒன்றுக்கும் உதவாதுபோனால்தான் உமக்குப் புத்திவரும்.

"ஐயோ! பாவமே! மழை முன்னிலும் அதிகமாய் விட்டதே. நாளைத் தினம் நான் என்ன செய்வேன்? என் தாய் வீட்டுக்கு எப்படிப் போவதோ? எனக்கு ஒன்றும் தோன்ற வில்லையே? அது எப்படியானாலும் சரி. நான் போகவேவேண்டும். **ஒரு குடையை இரவல் வாங்கிக் கொள்ளவா?** ஒருகாலும் வாங்கமாட்டேன். **புதுக்குடை வாங்கி வருகிறீரா?** பணமில்லாமல் எப்படி வாங்குவீரோ? யான் அறியேன், இருக்கும் பணத்தை யெல்லாம் குடைகள் வாங்குவதிற் செலவழித்தால், நாம் என்ன மண்ணைத்தின்னுகிறதா? **எப்படியாவது ஒன்று வாங்கிக் கொடுக்கிறீரா?** எப்படியாவது வாங்கிக்கொண்டு வந்தால், அந்தக்குடையை யொடித்துத் தெருவில் எறிந்துவிடுகின்றேன். எனக்கு நம்மகுடைதான் வேண்டும். இருந்த குடையை வேங்கடராயனுக்குக் கொடுப்பானேன்? புதுக்குடை வாங்குவானேன்? இருந்தால் நமக்குச் சொந்தமாயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் வேண்டவே வேண்டாம்.

"ஐயோ! என் குடைக்கு நேற்றுத்தானே புதிதாய் உறை போடுவித்தேன்! இப்படியெல்லாம் நேருமென்று எனக்குத் தெரிந்தால் போடுவித்திருக்கமாட்டேனே! என் கைப்பணம் செலவிட்டு உறை போடுவிக்கிறது, அதை நீர் வேங்கடராயனுக்குக் கொடுத்துவிடுகிறது. வெகு நன்றாயிருக்கிறது! கடைத்தேங்காயை யெடுத்து வழிப்பிள்ளையார்க் குடைத்ததுபோலன்றோ ஆகிறது. **நீர் தூங்கவேண்டுமோ?** உமக்கென்ன குரட்டைவிட்டு நன்றாய்த் தூங்குவீர். வாய் திறவாமல் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டிருக்கும் என்போன்ற மனையாளும் உம்மக்களும் உம்முடைய ஞாபகத்திற்கு வருவார்களா? வீட்டிலுள்ள பொருளில் எதனை யாருக்குக் கொடுக்கலாம் என்பது ஒழிய வேறு எண்ணம் உமக்கேன்?

"புருஷர்களாமே! 'பெண் சுதந்திரத்திற்குரியாள் அல்லள்' * என்று யாரோ ஒருவன், பெண்களை வீணிற் பெற்றுவைத்தவன்போல் தருமசாஸ்திரம் எழுதினனும். புருஷர் மாத்திரம் சுதந்திரமாயிருக்க யோக்கியராம். புருஷர்கள் யோக்கியதை தெரிந்ததே! ஒரு குடையைப் பத்திரமாய் வைத்துக்கொள்ளத்தெரியாதவர்கள் உலகத்திலுள்ள பெண்டிருக்கெல்லாம் உடையவராமே!

"நாளைக்கு நான் மழையில் நடந்து செல்வதனாற் கடைசியாய் என் பிராணனுக்குத் தான் வரப்போகிறது. மழையில் நனைந்தால் என் உடம்பிற்காகாதென்பது உமக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் அதுதானே நீரும் வேண்டுவது! அப்புறம் எந்நேரமும் ஊர் திரியலாம். நீர் விரும்பியபடியெல்லாம் செய்யலாம். நன்றாய்ச் சுகப்படுவீர். பிள்ளைகள் கதி அதோகதிதான். அதைப்பற்றி உமக்கென்ன விசாரம்? உம்முடைய கஷ்டமெல்லாம் நிவர்த்தியாகுமோ இல்லையோ! அதுவே உமக்குப் போதுமான காரியம். என்

---

* இது "நஸ்த்ரீ ஸ்வாதந்தரிய மர்ஹதிய" என்பதனை யுட்கொண்டு கூறப்பட்டுளது.

வீணாக என் வாயைத் தூண்டுகின்றீர்? இல்லாவிட்டாற் குடையை ஏன் வேங்கடராயனுக்கு அழுதீர்?''

மழை யதிகரித்ததனால், **கனகம்மா** தான்கூறியனவெல்லாம் தன் செவியிற் படாமையால் தன்கொழுநன்காதிலும் படாவென்று நினைத்து வாய் வாளாமை மேற்கொண்டாள். **இராமசுப்ப ஐயரும்** மழையும் இடியும் ஒருங்கே யோய்ந்தனவென நினைத்துத்தூங்க ஆரம்பித்தார்.

**வாசுதேவையபந்துலு.**

---

## REVIEWS OF BOOKS.

## புத்தகக் குறிப்புக்கள்.

திருப்புகழ் இரண்டாம்பாகம்:

[இது வ. த. **சுப்பிரமணியபிள்ளை யவர்கள்** சென்னை ஸ்டார்ஆவ் இந்தியா அச்சுக்கூடத்திற் பதிப்பித்தது. லிங்கசெட்டித்தெரு 292-ஆம் நம்பர் வீட்டிற் கிடைக்கக்கூடியது. இதன் விலை ரூபா 2; தபாற்கூலி அணா 3.]

628 பாடல்களடங்கிய இவ்வருமைப் பிரபந்தம் நல்ல பளபளப்புள்ள கனத்த கடிதத்திற் பெரிய எழுத்துக்களில் யாவரும் அகமகிழுமாறு பிரசுரிக்கப்பட்டுளது; ஏறக்குறைய 450 பக்கங்கள் கொண்டது; ஸ்தலப்பாடல்கள் பொதுப்பாடல்கள் என இருபகுதியுடையது. நூலின் முன்னர்ச் சிறப்புப் பாயிரம் முகவுரை, திருப்புகழ்ச் சிறப்புப்பாயிரம் எனும் இவற்றையும், பின்னர்ப்பாட்டு முதற்குறிப்பகராதியையும் கொண்டுள்ளது. இதன் முதற்பாகம் 1894-ஆம் வருஷம் அச்சிடப்பட்டது: அச்சிட்ட நாலைந்து வருஷத்திற் புத்தகமெல்லாம் செலவாய்விட்டன; தற்காலம் முதற்பாகம் ஒருபிரதியேனும் கிடைப்பதரிதாய் விட்டது. புத்தகம் வாங்கிப் படிப்பதில் மேல்நாட்டினை ஒரு சிறிது மொவ்வாத நந் தமிழ்நாட்டினும் இப்புத்தகம் இவ்வளவு ஆதரத்துடன் வாங்கி வாசிக்கப்பட்ட தென்றால் அதன் அருமை பெருமைகள் யாமெடுத்துரையாமலே விளங்கும். "வாக்கிற் கருணகிரி'' என்ற தனிப்பாடலினாலும் "ஐயா வருணகிரி யப்பா வுனைப்போல, மெய்யாக வோர்சொல் விளம்பினர்யார்?'' என்று மகானாகிய **தாயுமானஸ்வாமிகள்** கூறினமையானும், இந்நூல் சொல்லினும் பொருளினும் ஒருங்கே சிறந்த தென்பது சாமானியருக்குந் தெற்றெனப் புலப்படும். துதிநூலாகிய இப்பிரபந்தத்தை இதனினும் நன்றாயச்சிடுதலியலா தென்பது எமது தெளிந்த எண்ணம். என்னையெனின், தலங்களை வரிசைப் படுத்தியிருப்பது மிகநன்றா யிருக்கின்றது. முதற்பாகத்தில் முதலில் முருகபிரானின் ஆறுபடை வீடுகளாகிய திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை இவற்றின் பாடல்களும் அப்பாற் பஞ்சபூத ஸ்தலங்களாகிய காஞ்சீபுரம், திருவா

னைக்கா, திருவண்ணாமலை, திருக்காளத்தி, சிதம்பரம் இவற்றின் பாடல்களு முள்ளன. அவற்றின் தொகை 603. இரண்டாம் பாகத்திலோ காசி முதல் இராமேசம் ஈறாகவுள்ள திருவொற்றியூர், திருவாலங்காடு, திருமயிலை, விருத்தாசலம், சீகாழி, நாகபட்டினம், வேதாரணியம், திருவாரூர், கும்பகோணம், தஞ்சாவூர், திருவையாறு, வயலூர், கருவூர், மதுரை, திருக்குற்றாலம் முதலிய இடந்தெரிந்த தலங்கள் 124 - ம், அத்திக்கரை, பாகை, விஜயபுரம் முதலிய இடம் விளங்காத தலங்கள் 14-ம், உதக்குள்ளான் ஒருவன் சிவதரிசனங் கருதித் தக்கணம் செல்லின் அவன் கண்ணுறாஉம் வடநாடு, தொண்டைநாடு, நடுநாடு, சோழநாடு, கொங்கநாடு, பாண்டிநாடு என்னும் நாடுகளின் கிரமப்படியாதல் இவையியலாவழித் தலப்பெயர்களின் அகராதிமுறைமைபற்றியாதல் வைக்கப்பட்டிருக்கின்றன. இங்ஙனம் இரண்டாம் பாகத்துள்ள ஸ்தலப்பாடல்களின் தொகை 321; பொதுப்பாடல்களின் தொகை 307. அவ்வத்தலத்தின் பாடல்களை வரிசைப்படுத்தும் பொழுது அப்பாடல்கள் சந்தவினமாயின, பெரியன, சிறியன என்னும் முறைமை பற்றியும் அவையும் அகராதி முறைமை பற்றியும் வைக்கப்பட்டுள்ளன. பொதுப்பாடல்களு மிப்படியே. இவற்றையெல்லாம் நேரிற் புத்தகத்திற் கண்டுகொள்வதே நேரிதாம். ஒவ்வொரு பாட்டுக்குஞ் சந்தக் குழிப்பு எழுதி, விஷயசூசிகை, அரும்பதவகராதி முதலிய சேர்த்திருக்கலாமெனினும் அங்ஙனஞ்செய்ய நந்தம் பதிப்பாசிரியருக்கு அவகாசமிருந்திராது என்பதும் அதற்குத்தக நந்தமிழுலகம் பொருளுதவி செய்யா தென்பதுமே முக்கிய காரணமாகின்றன. எனினும், பாடல்களில் எளிதிற் பொருள் விளங்காத இடத்தெல்லாம் எழுதியுள்ள குறிப்புக்கள் மிகவும் பாராட்டற்பாலன. முதற்பாகம் விரைவில் இரண்டாம் பதிப்புக்கு வருமென நம்புகின்றோம். இங்ஙனம் திருப்புகழைத் தேடி அச்சிடுவதிலேயே தமது ஆயுட்காலம் முழுமையும் மிக ஊக்கத்துடன் கழித்துவரும் பிள்ளையவர்களுக்குத் தமிழுலகம் மிகக் கடமைப்பட்டிருக்கின்றது. இப்புத்தகத்தை அன்பர்கள் ஆசையுடன் வாங்கிப் படித்துப் பயனடைவதும் தக்க முயற்சிசெய்து மூன்றாம் பாகத்துக்குப் பழைய ஏட்டுப் பிரதிகள் சம்பாதித்தனுப்புதலுமே தக்க கைம்மாறாம்.

நாடகவியலுரை :

[இது சென்னைச் சடகோபாசாரியர் அண்டு கம்பெனியார் பதிப்பித்தது; இதன்விலை அணா 0 - 12 - 0. தபாற்கூலி வேறு.]

**நாடகவியல்** என்னும் நூல் சென்னைக் கிறித்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் **பிரமஸ்ரீ வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள், பி.ஏ.** இயற்றியது; இஃது அன்னார் பதிப்பித்துவரும் **தமிழ்மகண்மேகலை**யுள் முதற் கிங்கிணியாம்; இது நாடகத்தினுடைய இலக்கணங்களை யெல்லாம் ஒருசேரத்தொகுத்துக் கூறுவது. இதற்கு உரைவகுத்தவர் நாடகவியலாசிரியர் மாணாக்கரு ளொருவரும் கடலூர்க் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதருமாகிய **பிரமஸ்ரீ ந. பலராமையரவர்கள்.** நாடகவியலுரை யென்ற இந்நூலின்கண் முகவுரை, நூலாசிரியர் வரலாறு, மேற்கோள் நூல்களின் பெயர் முறை முதலாயினவும் அடங்கியிருக்கின்றன. இது 160 பக்கங்களுள்ளது. 1903-ஆம் வருஷத்துப் பி. ஏ., பரீட்சையின் பாடமாகிய நாடகவியலின் முதன் முப்பத்து நான்கு பக்கங்கட்கு மட்டிலே இதன்கண் உரைகாணப்படுகின்றது; எனவே இவ்வுரை மாணாக்கர்களுடைய பயன் கருதியே எழுதப்பட்டுளது போலும். ஒவ்வொரு சூத்திரத்திற்கும் பதவுரையும் விசேடக் குறிப்புக்களும்

காட்டப்பட்டுள. உரை நடை மிகத்தெளிவாகவும் யாவரும் விரும்பி மேற்கொள்ளத் தக்கவாறும் அமைந்திருக்கின்றது. நூலாசிரியரது உள்ளக்கிடக்கைக ளனைத்தையுஞ் சூத்திர வாயிலா னுய்த் துணர்ந்தும் உரையிற் கோடல்திய உத்திவகையாற் பெய்துரைத்தும், அவசியமான விடங்களில் தெளிவுபெற விளக்கியும் உரை செல்லுந்தன்மை யாவரும் பாராட்டற்குரியதே. இவ்வுரை புதிதாக நாடக மெழுதப் புகுவோர் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது. ஓராற்ருற் பார்க்குமிடத்து இவ்வுரை பொதுஜன நன்மை நாடியுஞ்செய்யப்பட்டதாமாறு தெற்றெனப் புலனும். நமது பலராமையரவர்கள் எஞ்சிய பகுதிகட்கும் உரை யெழுதி முடிப்பார்களென்று நம்புகின்ருேம். அங்ஙனம் அவர் செய்யுமிடத்து விசேட நன்மைவிளையு மென்றற்கண் யாதோரையப்பாடுமில்லை.

சோமசுந்தரக் காஞ்சி யாக்கம் :

[இது சென்னைப் பண்டித மித்திர யந்திரசாலையிற் பதிப்பித்தது; இதன் விலை இவ்வளவென்று நூற் புறத்தெங்குங் குறிக்கப்படவில்லை.]

இது **சோமசுந்தரக்காஞ்சி** யென்ற நூலின் மேற் சிலர் குற்றங்களேற்றியவழி, அவை யனைத்தும் போலியா யொழிதல் காட்டிச் செல்வதோர் வாதநூல். இதனை யியற்றினுர் சென்னைக் கிறித்தவ கலாசாலை உதவித்தமிழ்ப் பண்டிதர்களு ளொருவராகிய ம-ா-ா-ஸ்ரீ, **நாகபட்டினம்-வேதாசலம்பிள்ளையவர்கள்**. இந்நூலின்கண் நூற்பொருளாராய்வார் இனையராதல் வேண்டுமென்பதும், பொருளிலக்கணமாவது இது வென்பதும், அப்பொருட் கூறுபாட்டியல் இனையதென்பதும், காஞ்சித்திணை கையறுநிலை தாபதநிலை மன்னைக் காஞ்சி முதலியவற்றின் பொருண்மரபு இவ்வாறு மென்பதும், ஆனந்தக் குற்றமென வொன்றுகோடல் போலியா மென்பதும் பிறவும் ஒழுங்குபெற விளக்கப்பட்டுள்ளன. இடையிடையே மேற்புலவாணர் கருத்துக்களுங் காட்டப்பட்டுள. மிக்க செவ்விவாய்ந்த நடையில் நூன் முழுதும் இயன்றுளது; வாதமுறை பிறழாது எழுதப்பட்டுளது. இவர் கூறியன பலர்க்கு மொப்ப முடிந்தனவா மென்பது தேற்றம். பலர்வாதஞ் செய்வுழி விஷயத்தை விடுத்துப் புறம்பான வேறு பலவற்றை நலிந்தியைத்தும் நிந்தைச் சொற்புணர்த்தும் எழுதுகின்றனர். இன்னர் போலாது சோமசுந்தரக் காஞ்சியாக்க முடையார் நேரிய நெறியிற் சென்று மேற்கோள்வென்றி பெறுமாறு மிகவும் பாராட்டற்பாலதே.

மருங்காபுரிப் பிரபந்தத்திரட்டு :

[இது சாப்டூர் என்னும் மருதூர்ச் சமஸ்தான வித்துவான் **ஸ்ரீசிதம்பரப் புலவர்** பார்வையிட்டது ; சென்னைப் பண்டித மித்திர யந்திரசாலையிற் பதிப்பித்தது ; விலைகுறிப்பிக்கப்படவில்லை,]

இந்நூல் மருங்காபுரிச் சமஸ்தானத்து ஆதீன கர்த்தர் **ரங்ககிருஷ்ண முத்துவீரப்பூச் செயமகாராஜா** அவர்களின்மீது **மாம்பழக்கவிச்சிங்கநாவலரவர்கள்** இயற்றியது. நூலாசிரியரை யறியாதார் தென்னுட்டினு ளெவருமில்லை. இதன் கண்ணே சீட்டுக்கவி, கும்மி, தெம்பாங்கு, தங்கப்பாட்டு, பல்வகைய ஆசிரியவிருத்தங்கள், வெண்பாக்கள், கீர்த்தனைகள் முதலிய பலவித இயலிசைப் பாடல்களுள்ளன. நூல் முழுவதும் மிகவும் எளிய நடை

யில் அமைந்துளது ; படிப்பதற்குப் பெரிதும் விநோதமா யிருக்கின்றது ; வித்துவான்கள் பலர் இதைக்குறித்துச் சிறப்புக்கவிகள் சொல்லியிருக்கின்றனர் ; நூல் நல்ல பளபளப்புள்ள கடிதத்தில் அச்சிடப்பட்டுளது ; ஆதலிற் பலரும் வாங்கிப் படிப்பார்களென்று நம்புகின்றோம்.

காங்கிரேஸ் மகாசபை :

[இது மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலைத் தலைவராகிய **ஸ்ரீ. சை. சிவசங்கர செட்டியாரவர்கள், பி ஏ.,** பதிப்பித்தது; இதன் விலை அணு 4; தபாற் கூலிவேறு.]

இஃது இந்தியன் நாஷெனல் காங்கிரெஸ் என்று வருஷந்தோறுங் கூடுகின்ற மகாசபையின் சுருக்கமான சரித்திரமாம் ; **கல்குளம் - குப்புசாமி முதலியார் ; பி. ஏ.,** இயற்றியது ; இது நமது ஞான போதினிப் பத்திரிகையின்கண் அவ்வக்காலங்களில் **விஷய** ரூபமாக வெளிப்பட்டிருக்கின்றது ; அதற்கும் இப்பொழுது வெளிவந்திருக்கும் புத்தகத்திற்குஞ் சிற்சிலவிடங்களிற் பேதங்களு முண்டு. காங்கிரெஸைப்பற்றி நம்மவராவா ரனைவரும் அறிந்திருத்தல் நலம் என்றுகருதி நம்முடைய முதலியாரவர்கள் யாவருக்கும் பொருள் விளங்கத்தக்க சாமானிய எளியநடையில் எழுதியிருப்பதே யன்றியும் குறைந்த விலையும் ஏற்படுத்தி யிருக்கின்றனர். இவர் எழுதிய பாரத ஸாரத்திற்கும் இதற்கும் நடையமைப்பில் மிக்க வேறுபாடு காணப்படுகின்றது ; இதன்கண் எழுத்துப்பிழைகளும் பிறவும் கொஞ்சம் அதிகமாகவே காணப்படுகின்றன. இதற்குத் தக்ககாரணம் நன்குபுலப்படவில்லை. ஒருவேளை, அவசரப்பட்டு அச்சிட்டமையான் அவைகள் நேர்ந்தனபோலும். நமது முதலியாரவர்கள் மிகச் செவ்வையாய் அளவிறந்த கவலையோடு ஒருவருக்குப் பலரிடங்காட்டித் திருத்தி அச்சிடும் பெற்றியராதலின் இஃது அவர் தம் இயல்பொடு மாறுபடுதலின் இத்துணை யெழுதினோம், வேறன்று.

பஸ்மமகாத்மியம் :

[இஃது **ஈ. சபாபதிமுதலியா** ரவர்களாற் பண்டித மித்திர யந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது; இதன் விலை: அணு 2, தபாற்கூலி வேறு.]

இந்நூல் சென்னைக் கிறித்தவ கலாசாலை உதவித்தமிழ்ப் பண்டிதர்களுளொருவராகிய **ஈக்காடு - இரத்தினவேலு முதலியாரவர்கள்** இயற்றியது ; பல்லோரும் அங்கீகரிக்கத்தக்க பலவகைப்பட்ட சம்ஸ்கிருத நூல்களினின்றும் திரட்டப்பெற்ற மேற்கோள்களுள்ளது; சிவபத்தராயினோர் யாவர்க்கும் உபயோகமாகும்படி யெழுதப்பட்டுளது, இதன் கண்ணே திருமாலாதிய சர்வதேவர்களும் விபூதி தரித்தவர்களே யென்பதும், விபூதி சேகரிக்கும் விதியும், பஸ்மதாரணம் ஸ்மார்த்தமாகாது சிரௌதமே யென்பதும், சில ஆசங்கை நிவர்த்தியும் கூறப்பட்டுள்ளன. இந்நூலிற் காட்டிய பிரமாண நூல்களின் தொகை ௬௬-ஆம். இது சைவர்களனைவர்க்கும் இன்றியமையாதது. இதனை யாவரும் வாங்கிப்படித்து உய்வார்களென்று நம்புகின்றோம்.

ஸ்ரீ விருத்திப்பிரபாகரம் :

[இது மதராஸ் ரிப்பன் ப்ரெஸிற் பதிப்பித்தது; இதன் விலை ரூ. 4.]

இப்பெரிய வேதாந்தநூல் பூர்வத்தில் **சாது ஸ்ரீ நிச்சலதாஸர்** என்னும் பெரியாரால் ஹிந்தி பாஷையிற் செய்யப்பட்டது. தமிழறிந்தாரும் அதிலடங்

கிய உண்மைகண்டு கடைத்தேறும்படி தஞ்சைக் குப்புசாமி ராசு என்பவர் அதனைத்தமிழில் மொழிபெயர்த்துத்தர ரிப்பன்ப்ரெஸ் அதிபர் அச்சிட்டு வழங்கினர். ஸ்ரீ நிச்சிலதாஸர் வேதாந்த வுணர்ச்சி மிகவுடையாரென்பது அவரது நூலாகிய விசார சாகரத்தால் முன்னரேதமிழுலகம் அறியும். விசாரசாகர மியற்றிய பின்னர், "எழுவருட பரியந்தம் மெல்ல இருபத்தேழு லக்ஷம் சுலோகக் கணக்குள்ள நூல்களைத்தான் சங்கிரகஞ் செய்து அவற்றை விசாரித்து, தீவிர புத்திமான்களாகிய ஹிந்தி பாஷை யுணர்ச்சி யுள்ளார் பொருட்டு எல்லாவற்றின் நிண்ணய வடிவ ஸ்ரீவிருத்திப் பிரபாகர மென்னும்" இந்நூலினை யியற்றினர் என மொழி பெயர்ப்பாசிரியர் கூறுதலின் விசார சாகரதிற்கும் இதற்கும் உள்ள பொருத்தமும், இந்நூலினது சிறப்பும் நன்கு விளங்குகின்றன. "அகம் பிரஹ்மாஸ்மி என்னும் விருத்தியாற் காரியத்தோடு அஞ்ஞானத்தின் நிவர்த்தியும், பரமானந்தப் பிராப்தியு முண்டாகின்றன வென்பது வேதாந்த சித்தாந்தம். ஆண்டு, விருத்தி யென்பது யாது? அதன் காரணம் யாது? அதன் பிரயோஜனம் யாது? என்றிவ்வாறு அறியும் வேட்கை யுண்டாகி அக்காரணமாய் இவ் "விருத்திப் பிரபாகரம்" என்னும் நூல் சொல்லப்படுகின்றது" எனவரும் முதல் வாக்கியங்களால் நூற் கருத்தும் நூற்பயனும் ஒருவாறு அறியப்படும். இந்நூலின் கண் விருத்தியின் சொரூபமும், பிரமை அப்பிரமை யென்னும் வடிவங்களாகிய அதன்பேதமும், பிரமாண முதலிய வடிவங்களாகிய அதன் காரணமும், வியவகார சித்தியும் மோக்ஷ சித்தியுமாகிய அதன் பயனும் நிரூபிக்கப் படுகின்றன. விசாரசாகரத்துட் பிரிவுகள் தரங்கமெனப் பட்டமைபோல், பிரபாகரமென்னும் நாமத்திற் கேற்ப உட்பிரிவுகளாகிய பிரகரணங்கள் பிரகாசங்க ளெனப்பட்டன. இந்நூல் எட்டுப் பிரகாசங்கள் கொண்டது. முதல் ஏழு பிரகாசங்களும் "விருத்திதீபிகை" யென்னும் பெயரொடு முன்னரே பதிப்பிக்கப்பட்டன. எட்டாம் பிரகாசத்தைச் சேர்த்து நூலாசிரியர் தீபிகையைப் பிரபாகர மாக்கினர். தமிழ் நூலுள் எட்டும் ஒருங்கே காணப்படுகின்றன. இனித்தமிழ் விருத்திப் பிரபாகரத்திற்குச் சிறந்த முகவுரை யொன்று எழுதப்பட்டிருக்கின்றது. அம்முகவுரையுள் நூலின் சிறப்புய் நூற்பயனும், நூலைத்தமிழ் மொழியில் மொழிபெயர்த் துபகரித்தமையும் நூலாசிரியர் சரித்திரச் சுருக்கமும் விளக்கமாகக் கூறப்பட்டன. நூலாசிரியர் தேக வியோகமெய்திய காலம் விக்கிரமசகம் 1920 - எனக்கூறப்பட்டதாயினும் சகவுணர்ச்சி மாண்டவிக்காலத்துக் காலமறிதல் இதனால் எளிதானதில்லை. ஆயினும் ஏறக்குறைய 40-ஆண்டுகட்கு முன்னர் அவர் மரித்தனர் எனக் கணித்து அறிந்தோம்(கி. பி. 1862.) "இந்நூலாசிரியர் இவ்வரிய நூலை மிகவெளிய நடையில் வசனரூபமாக எழுதி யிருத்தல் பற்றி அவ்வாறேஇங்கும் யாவரும் எளிதிலுணருமாறு இஃது எளிய தமிழ் நடையில் மொழி பெயர்க்கலாயிற்று" என்னும் மொழி பெயர்ப்பாசிரியரோடு முரணுவாரில் யாமும் ஒருவராக நேர்ந்தமை யெமக்கு விசனந்தருகின்றது. தருக்க சங்கிரகம் தருக்க கௌமுதி முதலிய தருக்க நூல்களும்,வேதாந்த சூளாமணி, கைவல்ய நவநீதம், பஞ்சதசப்பிரகரணம் முதலிய தமிழ் வேதாந்த நூல்களும், ஸம்ஸ்கிருதவேதாந்த நூல்களும், விசாரசாகரமும் உணர்ந்தார்க் கன்றி மற்றை யோர்க்கு இந்நூல் எளி தெனல் சர்வ சம்மதமாகாது. நூலுட் பொரும்பான்மை காணப்படும் பதங்கள் ஆரியப்பதங்கள். அவற்றிற்கு அரும்பதவுரையுங் காணப்படவில்லை. வசனநடையும் சிலவிடங்களில் வடமொழி நடையைப் பின்பற்றியதாகின்றது. இவ்வாறு மொழிபெயர்த்தல் மொழி பெயர்ப்பவருக்குச் சுலபம். ஸமஸ்கிருத எழுத்தறியா விடினும் பாஷையுணர்ச்சி யுடைய பண்டிதர்களுக்கு

அதனை யறிதல் சுலபம். மற்றுத் "தமிழ்ப்புலமையும் வடமொழிப் புலமையு மொருங்கே யுடைய தீவிரதர புத்திமான்களுக் கிந்நூல்' என்று சொல்லுவ ராயின், எம்முடைய ஆக்ஷேபத்தை விலக்கிக் கொள்கின்றோம். அத்தகை யோர்க் கேற்பட்ட நூல்களுள் இதுவுமொன்று எனயாம் சம்மதிக்கின்றோம். இந்நூல் நல்ல காயிதத்தில் அக்ஷரப் பிழைகளின்றி நன்றாகப் பதிப்பிக்கப் பட்டமையும், நெடுங்காலம் கெடாதிருக்கத் தக்கவாறு கவசமிடப்பட்டமையும் பதிப்பித்தோர் உழைப்பிற்குச் சான்று பகர்கின்றன. வேதாந்த வுணர்ச்சி தலைக்கூடி முத்திபெற விச்சிக்கும் புலவர்கள் இதன் விலை ரூபா நாலையு மொரு பொருளாக மதியாது நூலினை வாங்கிக் கற்பரென நம்புகின்றோம்.

---

# EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புக்கள்,

---

**ஞானசாகரம்:**—இது சென்னை வேதாகமோக்த சைவசித்தாந்த சபைப் பிரசுரங்களி லொன்று. இம்மாதாந்தப் பத்திரிகை சமயசாத்திர தத்துவ சாத்திர பௌதிக சாத்திர இலக்கணப்பொருள் விரிப்பதாம். இப்பத்திரிகை யின் அதிபராவார் சென்னைக் கிறித்தவ கலாசாலை உதவித் தமிழ்ப் பண்டிதர் தளுளொருவராகிய **நாகபட்டினம்-ஸ்ரீ வேதாசலம் பிள்ளையவர்கள்.** இது பிலவஞு தை௴ முதல் வெளிப்படுகின்றது; சென்னைப் பண்டித மித்திர யந்திர சாலையில் முத்திரீகரிக்கப் படுகின்றது. இதன்கணடங்கிய பொருள்க ளாவன: ஞான சாகரம், கௌரவாபிமான சீலர், வேதாகமோக்த சைவசித் தாந்தசபை, சோமசுந்தர விஜயம், சகளோபாசனை, தமிழ்வடமொழியி னின்று பிறந்ததாமா?, தமிழ்ச் சொல்லுற்பத்தி, சமாசாரக் குறிப்புக்கள் என்பன வாம். 24-பக்கங்கள் கொண்ட இம்முதற்சஞ்சிகை நல்ல கடிதத்தில் நன்கு பதிப்பிக்கப்பட்டுளது. இதனைத் தமிழராவார் யாவரும் வாங்கிப்படித்து நமது பிள்ளையவர்களை யூக்குவார்களாக.

**சித்தாந்த தீபிகை.**—உண்மை விளக்கம் அல்லது சித்தாந்த தீபிகை யென்ற இம்மாதாந்தப் பத்திரிகையை யறியாதா ரொருவருமிலர். இப்பத்திரி கையின் சென்ற நவம்பர் டிசம்பர் மாதத்துச் சஞ்சிகைகளைக் கண்ணுற் றதிற்பல அருமையான விஷயங்கள் ஆங்கிலமொழியிற் பிரசுரிக்கப்பட்டிருந் தன. அவ்விஷயங்களு ளொன்று 'செவ்வந்திமா நகரக்கல்லூரிப் பாட்டு' என்பது. இது நமது ஞானபோதினிப் பத்திரிகைக்கென்று எழுதப்பட்டுத் தமிழ் முகவுரையோடும் அதன்கட் பிரசுரிக்கப்பட்டுளது. அதே விஷயம் ஆங்கில முகவுரை யொன்றோடு கூட்டித் சித்தாந்த தீபிகையின் மேற்கூறிய சஞ்சிகைகளிற் பதிப்பிக்கப்பட்டுளது; அங்ஙனம் பிரசுரிக்கப்பட்டதன்கண் இது முன்னரே ஞானபோதினியில் வெளிப்பட்டுள தென்பது குறிப்பிக்கப்ப டவில்லை. மாற்றுப் பத்திரிகையாக நமது ஞானபோதினியைப் பெறுகின்ற சித் தாந்த தீபிகைப் பத்திராதிபர் இவவுண்மையை விளக்காமற் போனதென்னோ? விஷயதானஞ் செய்த **நாகபட்டினம் ஸ்ரீ. வேதாசலம் பிள்ளையவர்களும்** இதைக்குறித் தொன்றும் தமது ஆங்கில முகவுரையின்கட் பேசினாரல்லர். அம்முகவுரைக்கண் ஞானபோதினிப் பெயர் குறிக்கப்பட்டுளதே யென்னின்

அது 'வேனிற்பாட்டு' என்ற பிறிதொரு விஷயமாக நிகழ்ந்ததா மென்க. ஆகவே பத்திரிகை யொழுங்கொடும் விஷயதான மரபொடும் ஒத்துவாராத இச்செயல் எவ்வாறு மேற்கொள்ளபட்டதோ ? அறிகிலேம்.

**சென்னைச் சர்வகலாசாலை விசாரணைச் சங்கம்** :—இம்மதி 19-ஆந் தேதி மாலை மேற்கூறிய சங்கத்தார் சென்னைக்கிறித்தவ கலாசாலையிற் புகுந்து அக்கலாசாலையின்கட் கல்விகற்பிக்கப்படும் முறைகள் முதலாயின வற்றைப் பற்றி விசாரணை செய்தார்கள். இன்னும் மற்றைய கலாசாலைகளுக்குஞ் சென்று இவ்வாறே விசாரிப்பார்களென்பது தெரிகின்றது. இத்தகைய விசாரணைகளால் அளவிறந்த நன்மைகளுண்டாகு மென்பது திண்ணம். இச்சங்கத்தார் விசாரணையி னிறுதியில் தங்களபிப்பிராயங்க ளனைத்தையும் புத்தக ரூபமாக வெளியிடுவார்க ளென்பது துணிவு.

**பிரவேச பரீட்சை** :—நமது சென்னைச்சர்வ கலாசாலைப் பிரவேச பரீட்சைக்குச் சென்ற 1901 - ஆம் வருஷம் போன மாணுக்கருட் சிலருக்கு அப்பரீட்சையின் வினுப்பத்திரிகைகளுட் பலவற்றின் முன்னுணர்ச்சியேற்பட்டிருப்பதாக வுணர்ந்து கொண்ட சர்வகலாசாலை யதிகாரிகள் அங்ஙனம் முன்னுணர்ச்சி பெற்ற மாணவர்கட்கு மறு பரீட்சை யொன்று ஏற்பாடு செய்திருக்கின்றனர். அது வருகிற மார்ச்சுமீ மூன்றாந்தெய்தி நிகழுமாம். பரீட்சை நிகழுமிடம் சென்னையே, வெளியூர்களிலுள்ள மாணுக்கரனைவரும் ஈங்கே பரீட்சைக்கு வரல்வேண்டுமாம். இத்தகைய தௌர்ப்பாக்கிய நிலைமைகட் கெல்லாம் மாணுக்கராவார் தங்களையேன் ஆளாக்கிக் கொள்ளவேண்டும் ? இனிமேலாவது மாணுக்கர்கள் கவனித்து நேரியவழியில் நடப்பாராக.

**சென்னைச் சர்வகலாசாலை வருஷாந்தக்கூட்டம்** :—இது வருகிற மார்ச்சுமீ 21-ஆந்தேதி வெள்ளிக்கிழமையன்று மாலைகூடும். இதன் கண்ணே சென்ற வருஷத்திற் பட்டப் பரீட்சைகளிற் றேறிய மாணுக்கர்களெல்லாம் தத்தமக்குரிய பட்டம் பெறுவார்கள். அற்றை ஞான்று மாலை, அங்ஙனம் பட்டம் பெற்று உலகவாழ்க்கையிற் புகுகின்றவர்கள் நலங்கருதிக் கனம் பொருந்திய **திவான் பகதூர் ஸ்ரீநிவாசராகவ ஐயங்காரவர்கள், பி. ஏ.,** உபந்யாசஞ் செய்வார்கள். இவர் பரோடா வென்னுஞ் சுதேசராஜ்யத்தின் கண் அமைச்சுத் தொழில் பூண்டு யாவரும் தம்மைப் புகழ்ந்து கொண்டாடத் தக்கவாறு நடந்து வந்தவர் ஆதலின் உலக வியாபாரம் நன்குணர்ந்த நம் ஐயங்காரவர்கள் அவ்வுபந்யாசத்தின் மூலமாய்ச் சர்வஜனங்களையுங் களிப்பிப்பாரென்று எதிர் பார்க்கின்றனம்.

**போதகாசிரியர் பட்டப்பரீட்சை** :—இல். எல். டி. பரீட்சையில் ஐம்பத்தோ ராசிரியர்கள் தேறிப் பட்டம் பெறுதற்குரிய ராயினுர்கள். அவர்களில் மூவர் முதல் வகுப்பில் தேறியிருக்கின்றன ரென்பது யாவரும் களிகூரத்தக்க விஷயம்.

**இந்திய வித்யா விசாரணை மந்திரி** :—நமது **கர்ஸன் பிரபுவவர்கள்** நமது இந்தியாவிற்கு வித்யா விசாரணை மந்திரி யொருவர் நியமிக்கப்படுதல் வேண்டுமென்று பலமுறைதளிலு மெடுத்துப் பேசியு மெழுதியும் முயன்று தாம் மேற்கொண்ட காரியத்தைச் சாதித்துவிட்டனர். இந்திய மந்திரியின் அநுமதியின்மேல் **ஆஸ்கார் ப்ரௌனிங்கு** துரையவர்கள் மேற்கூறிய இந்தியவித்யா விசாரணை மந்திரியாராக நியமிக்கப் பட்டுள ரென்பது கேட்டு மகிழ்வார் பலர்.

# Specimens of RUBBER STAMPS

MANUFACTURED BY THOMPSON & CO.,

*The City Rubber Stamp Makers, Broadway, Madras.*



No. 313—Rs. 2-8-0.




No. 303—Rs. 2-8-0.




No. 314—Rs. 2-8-0.




No. 309—Rs. 2-0-0.




No. 300—Rs. 3-0-0.




No. 304—Rs. 3-8-0.




No. 302—Rs. 2-0-0.




No. 306—Rs. 3-0-0.




Rs. 3-0-0.

ஒவ்வொரு டைரியிலும் நமது சக்கரவர்த்தியினுடைய உருவப் படம் மிக நேர்த்தியாய் அச்சிட்டு வைக்கப்பட்டிருக்கிறது.

## தாம்ஸன் அண்டு கம்பெனியார்

# மினெர்வா டைரிகள்.

அடுத்துவரும் 1902வருஷத்துக்கு அதி உபயோகமான சிறந்த விஷயங்களடங்கிய டைரிகள் விற்பனைக்குத் தயாராக விருக்கின்றன.

நெ. 1. ஆறுவித பாஷைகளில் அச்சிடப்பட்ட மினெர்வா பாக்கெட் டைரி 3 அங்குல அகலமும் 4¼ அங்குலநீளமும் உள்ளது. 0 4 0

2. ஷை ஷை மடிப்பு உள்ளதும் பென்சல் வைக்கப்பட்டதுமான பாக்கெட் டைரி 0 6 0

3. அதிக உபயோகமுள்ளதும் அவசியமான விஷயங்களடங்கியதும் 8 - அங்குல நீளமும் 5 - அங்குல அகலமும் உள்ளது. 0 12 0

3. ஷை பக்கங்களுக்கிடையில் பிளாட்டிங் பேபர் வைத்தது 1 0 0

4. அதிக உபயோகமும் அவசியமுள்ளதுமான விஷயங்களுடையதும் 10 - அங்குல நீளமும் 8 - அங்குல அகலமுமுள்ளதும் பக்கங்களுக்கிடையில் பிளாட்டிங் பேபர் வைத்தது. 1 2 0

5. பூல்ஸ்காப் கடித அளவில் அச்சிடப்பட்டு நேர்த்தியாய்ப் பயிண்டு செய்யப்பட்டதும் அதிக உபயோகமும் அவசியமுமான விஷயங்கள் அடங்கியதும் 13-அங்குல நீளமும் 8-அங்குல அகலமும் உள்ளதும் பக்கங்களுக்கிடையில் பிளாட்டிங் பேபர் வைத்தது. 1 4 0

மேற்கண்ட டைரிகளில் 1-வது 2-வது நெம்பர் டைரிகள் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, துலுக்கு, மலையாளம், கன்னடம் இந்த ஆறுவித பாஷைகளில் தேதிகள் அச்சிட்டிருப்பதோடும் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு பாஷைகளில் பஞ்சாங்கம், 12-மாதத்து ராசி சக்கரம், அமிர்தயோகம் யோகினிநிலை, மகர சங்கராந்தி, ஆலயதரிசனம், ஆபரணம் அணிதல், ஆருடத்திற்கு, ஆர்தைக்காதல், உபநயனத்திற்கு, உழவுசெய்ய, எதிர்கொள்ளுதலிவை நன்மை தீமை யறியும் பயன், கருட தரிசனம், இராகுகாலம், கரிநாள், காது குத்தும் நாள், கிருகப்பிரவேசம், கோடியுடுத்தல், சீமந்தம், க்ஷௌரம், திக்குத்தும்பல், தேதிமழை, விஷேக முகூர்த்தம், பயணஞ்செய்யும் தினம், செய்யாத்தினம், பல்லிவிழும் பலன், கௌரி பஞ்சாங்கம், முதலியவைகளும் அச்சிடப்பட்டிருப்பதனால் இஃது எல்லோருக்கும் சிறந்த உபயோகத்தைக் கொடுக்கும். இதுவரை வெவ்வேறிடங்களில் அச்சிடப்பட்ட டைரிகளைக்காட்டிலும் நூதனமும், அதிக விசேஷமுமான விஷயங்களும் அடங்கியிருக்கின்றன.

வேண்டுவோர் அடியிற்கண்டவிடத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

தாம்ஸன் கம்பெனி,
33, பிராட்வே, சென்னை.

PRINTED AT THE "MINERVA" PRESS, BROADWAY, MADRAS.